16.10.15

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## 'தரமற்ற பொருள் வாங்கி ஏமாறாதீர்!' தர நிர்ணய ஆணையம் அறிவுரை

சென்னை,:"தரத்தை அறிந்து பொருட்களை வாங்க வேண்டும்; தரமற்றதை வாங்கி ஏமாற வேண்டாம்," என, இந்திய தர நிர்ணய ஆணைய துணை இயக்குனர் தேவேந்தர் தெரிவித்தார்.உலக அளவில், தர நிர்ணயத்திற்காக பாடுபடும் வல்லுனர்களை கவுரவிக்கும் வகையில், சென்னையில், இந்திய தர நிர்ணய ஆணையம், தென்மண்டல அலுவலகம் சார்பில், உலக தர நிர்ணய தினம் கொண்டாடப்பட்டது. இதில், இந்திய தர நிர்ணய ஆணைய, துணை இயக்குனர் தேவேந்திரன் பேசுகையில், "பொருட்களை வாங்கும்போது, அவற்றின் தரம் குறித்த விவரங்களை அறிந்து வாங்க வேண்டும்; தரமற்றதை வாங்கி ஏமாறக்கூடாது; பொதுமக்களிடம் இது தொடர்பான விழிப்புணர்வு தேவை. தர நிர்ணய ஆணையம், தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து விழிப்புணர்வை ஏற்படுத்தும்," என்றார்.

## வைகையில் தண்ணீர் திறக்க விவசாயிகள் கோரிக்கை

பரமக்குடி:போதிய பருவமழை பெய்யாததால் ராமநாதபுரம் மாவட்டத்தில் நிலவும் தண்ணீர் பற்றாக்குறையை தவிர்க்கும் விதமாக வைகையில் தண்ணீர் திறந்துவிட முதல்வர் ஜெ., நடவடிக்கை எடுக்கவேண்டும் என, விவசாயிகள் வலிறுத்தியுள்ளனர். இது குறித்து விவசாயிகள் சங்க பொதுச்செயலாளர் மதுரைவீரன் கூறியதாவது: மாவட்டத்தில் மழையின்றி வறட்சி நிலவி வருவதால்

விவசாய பணிகள் ஆரம்பிக்காமல் உள்ளனர். கண்மாய்கள் வறண்டுள்ளன. நிலத்தடி நீர் மட்டம் 300 அடியை தாண்டிவிட்டது. கிராமங்களில் குடிநீர் பிரச்னையால் குடம் ரூ. 5 க்கும், நகரில் ரூ. 10 க்கும் வாங்கும் நிலை உள்ளது. அக்., 10 நிலவரப்படி வைகை அணையில் 1,680 மி.கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது. தற்போது பருவமழை ஆரம்பிக்கும் என வானிலை ஆய்வு மையம் கூறுகிறது. இதனை கவனத்தில் கொண்டு ராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள ஒரு லட்சத்து 10 ஏக்கர் பரப்பளவு வைகை நீர் பாயும் நஞ்சை நிலங்கள் செழிக்க, உடனடியாக தண்ணீர் திறக்க வேண்டும். இதன் மூலம் குடிநீர் பிரச்னை, கிணறு, ஆழ்குழாய் பாசனத்திற்கும் தீர்வு ஏற்படும், என்றார்.

## மேற்கு மலைத் தொடரில் மட்டுமே உள்ள அரிய மரங்கள்: கண்காட்சியில் விளக்கம்



காந்திகிராமம்:மேற்கு தொடர்ச்சி மலைத் தொடரில் மட்டுமே வளரக்கூடிய 10 வகை அரிய வகை மரங்கள், காந்தி கிராம பல்கலை கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டன.காந்திகிராம பல்கலையின்

உயிரியில் துறை, நாட்டு நலப்பணித் திட்டம், சூழல்குழு சார்பில், விலங்குகள், தாவரங்களை அழிவிலிருந்து காப்பது குறித்த விழிப்புணர்வு கண்காட்சி, குறும்பட காட்சி காட்சிப்படுத்தப்பட்டன. துணை வேந்தர் நடராஜன் துவக்கி வைத்தார். உயிரியியல் துறை உதவி பேராசிரியர் ராமசுப்பு, ஆராய்ச்சி மாணவர்கள் கண்காட்சியை வழிநடத்தினர்.

உதவிபேராசிரியர் கூறியதாவது: கோவா முதல் கன்னியாகுமரி வரை மேற்கு தொடர்ச்சி மலை 1,600 கி.மீ.,நீண்டுள்ளது. இங்கு 5, 860 வகை தாவரயினங்கள் கண்டறியப்பட்டு உள்ளன. இதில்,'எண்டமிக்' எனப்படும் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே காணப்படும் 1,600 தாவரங்கள் உள்ளன. அதில் பல்கலை சார்பில் 500க்கும் மேற்பட்ட மரங்கள் குறித்த ஆய்வுகள் நடக்கின்றன. விலங்கினங்கள் என்றால் விலங்குகள் மட்டுமே என மாணவர்கள் தவறாக புரிந்து கொண்டுள்ளனர். வன உயிரினங்களில் இயற்கை வாழ்வியல் சுழற்சி முறையில் பூக்கும் தாவரங்கள், பூவா தாவரங்கள், பூச்சியினங்கள், ஊர்வனயினங்கள், பறவைகள், பாலுாட்டிகள் அடங்கும்.இதில் வன உயிரினங்கள் பல்வகை அதிசய குணத்தை கொண்டுள்ளன. கண்காட்சியில் எங்களது ஆய்வில் உள்ள மிக அரிய வகையான ஆரோக்கியபச்சை, காட்டுத் திப்பிலி, காட்டுநாவல், செம்மரம், ஜாதிக்காய், அசோகமரம், சூடமரம், ருத்ராட்சம்,மஞ்சகஞ்சி, குரங்குநாவல்உள்ளிட்ட மரக்கன்றுகளை காட்சிப்படுத்தி உள்ளோம். இவை மேற்கு தொடர்ச்சி மலையில் மட்டுமே வளர கூடியவை. உலகில் வேறு எங்கும் இவ்வகை மரங்கள் இருக்காது, என்றார்.

## மேட்டூர் அணையின் நீர்வரத்து குறைந்தது

மேட்டூர் : மேட்டூர் அணையின் நீர்வரத்து, 9,796 கனஅடியிலிருந்து 5,763கனஅடியாக குறைந்தது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் 68.15 அடியாகவும், நீர் இருப்பு 31.13 டி.எம்.சி.,யாகவும் உள்ளது. மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக வினாடிக்கு 12 ஆயிரம் கனஅடி நீரும், அணையிலிருந்து கிழக்கு மற்றும் மேற்கு கால்வாய் பாசனத்திற்காக 700 கனஅடி நீரும் திறக்கப்படுகிறது.

## 15 ஆண்டுகளுக்குப்பிறகு புல்லூர் அணை நிரம்பியது

வாணியம்பாடி : கர்நாடக மாநிலத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக, காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, வாணியம்பாடி புல்லூர் அணை நிரம்பியது. 15 ஆண்டுகளுக்குப்பிறகு புல்லூர் அணை நிரம்பியதால் வேலூர் மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## டிசம்பரில் விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் நன்மைபயக்கும் இயற்கை விவசாயம்!

“விவசாயத்தில செலவுக்கும் வரவுக்குமே சரியாப் போகுது, இதுல எங்கெருந்து லாபம் கிடைக்குறது!” இதுதான் இன்று பெரும்பாலான விவசாயிகளின் புலம்பல். இந்தக் காரணத்தினாலேயே விவசாயத்தைக் கைவிட்டோர் பலர். தமிழகத்தில் பெரும்பாலும் அரிசியே பிரதான உணவாக உள்ளது. பருப்பு, காய்கறிகளோ அன்றாட சமையலில் அத்தியாவசிய தேவைகளாகின்றன. ஆனால், அரிசி, பருப்பு, காய்கறிகளையும் நமக்கு கிடைப்பதற்காக, கழனியில் இறங்கி பாடுபட்டு விளைவிக்கக் கூடிய விவசாயிகளின் நிலைமையோ, இன்று கேள்விக்குறியாகவே உள்ளது. பல பரம்பரை விவசாயிகள் விவசாயத்தைக் கைவிட்டு வேறு தொழில்களுக்கு

சென்றுகொண்டிருக்கின்றனர். இதற்கு பல்வேறு காரண்களை நாம் சொல்ல முடியும். அவற்றுள் முக்கியமானது, தற்சார்பின்மை!



அதாவது இப்போது நீங்கள் விவசாயம் செய்ய வேண்டுமானால், அதற்காக நீங்கள் வெளியாட்களையோ, வெளியிலிருந்து வாங்கப்படும் இடுபொருட்களையோ நம்பி இருக்க வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. சென்ற தலைமுறைக்கு முன்புவரை, இந்த நிலைமை நிச்சயம் இல்லை! ஏர் உழுதல் முதல் கதிரடித்து, களம்சேர்த்து வியாபாரம் செய்வது வரை, அனைத்தையும் விவசாயிகள் தன்னிச்சையாக சுயசார்புடன் மேற்கொண்டு வந்தனர். ஆனால், தற்போது உழவதற்கும், ரசாயன உரம் வாங்கவும், விதைகளை வாங்கவும், அறுவடை செய்வதற்கான ஆட்களுக்காகவும் இப்படி ஒவ்வொன்றிற்கும் விவசாயிகள் இன்னொருவரையே நாட வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இந்நிலையை மாற்றும் விதத்தில், ஜீரோ பட்ஜெட் இயற்கை விவசாயம் என்ற இயற்கை வேளாண் முறையை தமிழக விவசாயிகளுக்கு கற்றுத்தர சுபாஷ் பாலேக்கர், திருப்பூர் மாவட்டம் பல்லடம் வருகிறார்.

**விவசாயிகள் தற்சார்புடன் இருக்கலாம்:**

சுபாஷ் பாலேக்கரின் இயற்கை வேளாண் முறையினைப் பின்பற்றும்போது, விவசாயிகள் வெளியாட்களையோ அல்லது வெளியிலிருந்து கிடைக்ககூடிய இடுபொருட்களையோ நம்பியிருக்க

வேண்டிய தேவையிருக்காது. ரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளையும், ரசாயன உரங்களையும் வெளியிலிருந்து பெரும்செலவு செய்து வாங்கி, மண்ணைக் கெடுப்பதோடு தங்களையும் தங்களை நம்பி இருக்கும் நுகர்வோரின் ஆரோக்கியத்தையும் கெடுக்கும் நிலை இதில் இருக்காது. விதைக்காகவும், உரத்திற்காகவும், பூச்சிக்கொல்லிக்காகவும் விவசாயிகள் வெளியுலகத்தை சார்ந்திராமல், தாங்களே தங்கள் நிலத்திலிருந்தே பெற்றுக்கொள்ள முடியும்!

**செலவில்லாமல் இயற்கை விவசாயம்:** அதுமட்டுமல்லாமல், சுபாஷ் பாலேக்கர் கற்பிக்கும் இந்த இயற்கை வேளாண் முறைக்கு ஜீரோ பட்ஜெட் இயற்கை வேளாண்மை எனப் பெயரிட்டுள்ளார். அதாவது செலவே இல்லாமல், இயற்கை வேளாண்மையை நாம் செய்ய முடியும் என்பதை உணர்த்துகிறது இந்த வேளாண்முறை. பொதுவாக தண்ணீர் பற்றாக்குறை விவசாயிகளுக்கு பெரும் சவாலாக உள்ளதைப் பார்க்க முடிகிறது. அதற்கு இந்த ஜீரோ பட்ஜெட் வேளாண்மை தீர்வைத் தருகிறது; குறைவான நீர்ப் பாசனத்தில் விவசாயம் செய்யும் உத்தியை கற்றுத்தருகிறது.

மேலும், வேலை ஆட்கள் பற்றாக்குறை விவசாயத்தில் ஒரு நெருக்கடியை தந்துள்ளது. விவசாய வேலைக்கு கூலியாட்கள் கிடைப்பது குதிரைக்கொம்பாக இருப்பதோடு, அவர்களின் ஊதியத் தொகையும் அதிகரித்து விட்டதால் செலவு அதிகரித்துவிடுகிறது. இந்நிலையின் தீவிரம் சுபாஷ் பாலேக்கரின் இயற்கை வேளாண்முறையைப் பின்பற்றுகையில் வெகுவாக குறைகிறது. நீர்ப்பாசனத்தில், ரசாயன இடுபொருட்களின் பயன்பாடில்லாமல், இயற்கையில் தங்களது நிலங்களில் கிடைக்கும் பொருட்களை வைத்து, செலவே இல்லாமல் ஜீரோ பட்ஜெட்டில் விவசாயம் செய்யும்முறையாக இம்முறை, விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக விளங்குகிறது.

**நுகர்வோர் நலன் காக்கப்படுதல்:**

பொதுவாக இன்று, ரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவற்றினால் பலவித பாதிப்புகள் வருவதை மருத்துவர்களும் ஆராய்ச்சியாளர்களும் சொல்ல ஆரம்பித்துள்ளனர். நஞ்சில்லா உணவை உண்ண வேண்டுமென்பதே அனைவரின் ஆவலாக உள்ளது. ஆனால், அதற்கு வழியில்லாமல், பெரும்பான்மை விவசாயிகள் ரசாயன இடுபொருட்களைப் பயன்படுத்தினால்தான் அதிக மகசூல் ஈட்டமுடியுமென்ற அறியாமையில் சிக்கி, இயற்கை வேளாண்மையை புறந்தள்ளியுள்ளனர். சுபாஷ் பாலேக்கரின் இந்த இயற்கை விவசாய முறை அதற்கு ஒருநல்ல தீர்வாக இருக்கும்.

இயற்கை விவசாயத்தால் விளைந்த பொருட்களின் விலை அதிகமாக உள்ளதால் அதை சாமானிய மக்கள் வாங்கி உண்ணும் நிலை இன்று இல்லை! ஆனால், பெரும்பான்மை விவசாயிகள் இம்முறையைப் பின்பற்ற முன்வரும்போது, அப்போது சாமானியர்களும் இயற்கை விளைபொருட்களை வாங்கியுண்ணும் நிலை நிச்சயம் உருவாகும். நஞ்சில்லா உணவு என்பது அனைவருக்கும் சாத்தியமாகும். இப்போது நாம் அதை நோக்கி நமது முதல் அடியை எடுத்து வைக்கும் நேரம் வந்துள்ளது!

**நிகழ்ச்சி குறித்த விவரங்கள்:**

ஜீரோ பட்ஜெட்டில் இயற்கைவிவசாயம் செய்வது எப்படி? இயற்கை விவசாயத்தை முழுமையாகக் கடைபிடிக்க முடியுமா? இதுபோன்ற கேள்விகள் உங்கள்மனதில் தோன்றலாம்! உங்கள் சந்தேகங்களை எல்லாம் போக்கும் வகையிலும், இதன்நடைமுறை சாத்தியத்தை உறுதிப்படுத்தும் விதமாகவும், நீங்கள் கற்றுக்கொண்டதை மற்றுவருக்கும் கற்றுக்கொடுக்கும் வகையிலும் இந்தவகுப்பின் தன்மையானது அமையும். நிகழ்ச்சியின் 8 நாட்களும் முழுமையாகக் கலந்துகொள்பவர்களுக்கு தொடர்ந்து ஆலோசனைகளும் ஆதரவும் வழங்கப்படும். இதன்மூலம் இயற்கை விவசாயம் குறித்த தெளிவான பார்வையை நீங்கள் பெறுவது உறுதி.

பல்லடம் திருச்சி மெயின் ரோடு, ஸ்ரீ விக்னேஷ்மஹால் (இலட்சுமி மில்ஸ் பஸ் நிறுத்தம்)ல் 10.12.2015 முதல் 17.12.15 வரை, 8 நாட்கள் தொடர்ந்து வகுப்புகள் நடைபெறும். நிகழ்ச்சியில் கலந்துகொள்பவர்களுக்கு மூன்று வேளை உணவு மற்றும் தங்கும் இடம் வழங்கப்படும். முன்பதிவு அவசியம்! எட்டு நாட்களும் பயிற்சியில் கலந்துகொள்வது அவசியம்!

ஜீரோ பட்ஜெட் சேனாதிபதி (பயிற்றுநர்) சிறப்பு பயிற்சி வகுப்பு கற்றுக்கொள்ள அழைக்கிறது ஈஷா பசுமைக்கரங்கள் திட்டம்.

இந்தபயிற்சிக்கான விண்ணப்பத்தை www.projectgreenhands.org/ZBT என்றவலைதளம் மூலம் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். தமிழகம் முழுவதும் அனைத்து ஈஷா நர்சரிகளிலும் விண்ணப்பங்கள்கிடைக்கும். மேலும் விபரங்களுக்கு: 94425 90068, 94425 90036.

**பணம் செலுத்தினால் இயந்திரத்தில் வரும் உணவு**




தேவையான பணத்தை, ஏ.டி.எம்., இயந்திரத்தில் எடுப்பது போல, விரும்பிய சைவ, அசைவ உணவை குறிப்பிட்டால், உணவு பொட்டலம் கிடைக்கும் இயந்திரம், சென்னை வாசிகளிடையே பிரபலமாகி வருகிறது.உணவு துறையில், இந்த புதிய இயந்திரத்தை கண்டுபிடித்து, சந்தைக்கு கொண்டு வந்திருப்பவர், கோவையை சேர்ந்த, சதீஷ் சாமி

வேலுமணி. இந்த இயந்திரம் வடிவமைக்கப்பட்டதும் கோவையில் தான். ஆண்டுக்கு, 6 கோடி ரூபாய் வரவு - செலவு செய்து வரும் இவர், சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம்; ராமாவரம், டி.எல்.எப்., - ஐ.டி., பூங்கா; தி.நகர், சென்னை சில்க்ஸ் வளாகம் ஆகிய இடங்களில், 10 மாதங்களுக்கு முன் இந்த இயந்திரத்தை வைத்துள்ளார். காலையில், இட்லி, இனிப்பு, வடை - பொங்கல், இனிப்பு, வடை - சப்பாத்தி, குருமா, இனிப்பு - நூடுல்ஸ்; மதியத்தில், மினி மீல்ஸ் - பிரியாணி, சிக்கன் 65; இரவு நேரங்களில் டிபன் என, 224 வகையான உணவுகளை இந்த இயந்திரம் மூலம் பெறலாம். இந்த உணவு அரங்குக்குள் நுழைந்ததும், இரண்டு ஏ.டி.எம்., இயந்திரங்கள் வரவேற்கும். அதன் திரையில் சைவ, அசைவ உணவு வகைகள், அவற்றின் விலையுடன் தெரியும். எந்த உணவு வேண்டுமோ அதை தேர்வு செய்து, 'டெபிட் கார்டு' அல்லது 'கிரெடிட் கார்டை' இயந்திரத்துக்குள் செலுத்தி பணம் செலுத்த வேண்டும். அதற்கான, பில் கைக்கு வரும். இதன்பின், ஏ.டி.எம்., இயந்திரத்துக்கு பின் உள்ள, மற்றொரு இயந்திர கவுன்டருக்கு சென்றால், தேர்வு செய்த உணவு பாக்கெட்டை எடுத்துக் கொள்ளலாம். இதற்கான நேரம், 90 வினாடிகள் மட்டுமே. இது தான் உணவு பாக்கெட் பெற, வாடிக்கையாளர் செய்ய வேண்டியது. உணவு பாக்கெட்டை பெற்றதும், அரங்கில் உள்ள மேஜையில் அமர்ந்து உட்கொள்ளலாம். 'அட்சயம்' என்ற கம்பெனி மூலம், 'புட் பாக்ஸ்' என்ற வணிகப் பெயருடன், இப்புதிய முறையை அறிமுகம் செய்துள்ள, அந்த நிறுவனத்தின் தலைவர் சதீஷ் சாமி வேலுமணி கூறியதாவது: அனைத்துத் துறைகளிலும் புதிய புதிய உத்திகள் வந்த வண்ணம் உள்ளன. குறிப்பாக, டிஜிட்டல் உலகில் புதிய வரவுக்கு மிகுந்த வரவேற்பு உள்ளது. பத்திரிகை, குளிர் பானங்கள் போன்றவற்றை இயந்திரம் மூலம் வழங்கும்போது, உணவை வழங்க முடியாதா என மேற்கொண்ட

முயற்சிக்கு பலன் கிடைத்துள்ளது.எங்கள் நிறுவனம், உணவை உற்பத்தி செய்வதில்லை. பிரபல உணவு நிறுவனங்களின் உணவுகளை சந்தையிடுவது தான் எங்கள் வேலை. அதை, இயந்திரம் மூலம் சந்தையிடுகிறோம்.கணினி மென்பொருளை கொண்டு, இந்த இயந்திரத்தை வடிவமைத்துள்ளோம். அடையாறு ஆனந்த பவன், அஞ்சப்பர், டில்லி ஹைவே, ஹைதராபாத் ரமாஸ், நூடுல்ஸ் கிங் போன்ற உணவு தயாரிப்பு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்துள்ளோம். காலை, மதியம், இரவு வேளைகளுக்கு தேவையான உணவை இந்நிறுவனங்களுக்கு, ஆர்டர் தருகிறோம். அவற்றை, பாக்கெட்களில் அடைக்க தேவையான பொருட்களையும் அளித்து விடுகிறோம். எங்கள் ஆர்டருக்கு ஏற்ப, உணவு பாக்கெட்டில் அடைத்துத் தருகின்றனர். இவற்றை, உணவு வழங்கும் தானியங்கி இயந்திரத்தில் வைத்து விடுவோம். ஏ.டி.எம்., மூலம் பணம் எடுப்பது போல், தேவையான உணவை தேர்வு செய்தால், உணவு பாக்கெட் கைக்கு வந்துவிடும். உணவகங்களுக்கு நேரில் சென்று சாப்பிடும்போது, எவ்வளவு செலவு ஆகிறதோ, அதே செலவு தான், இயந்திரம் மூலம் பெறும் உணவு பாக்கெட்டுக்கான விலை. அதே சுவையோடு, தரத்துடன் உணவு இருக்கும். உணவு வழங்கும் நிறுவனங்களின் வணிக குறியீடும், உணவு பாக்கெட் மீது இருக்கும். சென்னையில் உள்ள, எங்களின் மூன்று கிளைகள் மூலம் தினமும், 3,000 பேர் சாப்பிடுகின்றனர். பாக்கெட்டில் அடைக்கப்பட்ட, ஆறு மணி நேரத்துக்குள், பயன்படுத்தாத உணவை விற்பதில்லை. இயந்திரமும் இந்த உணவு பாக்கெட்டுகளை தராது.இவ்வாறு அவர் கூறினார். காப்புரிமை

மேலும் அவர் கூறியதாவது: உணவு வழங்கும் இயந்திரம், உலகில் வேறு எங்கும் இல்லை. எங்கள் முயற்சிக்கு கிடைத்த வெற்றியை தொடர்ந்து, நாட்டின் பிரதான நகரங்களில் துவங்க திட்டமிட்டுள்ளோம்.

வெளிநாடுகளில் இருந்தும், அழைப்புகள் வருகின்றன. முழுக்க முழுக்க எங்கள் கண்டுபிடிப்பு என்பதால், இந்த இயந்திரத்துக்கு காப்புரிமை கேட்டு விண்ணப்பித்துள்ளோம். புதிய கண்டுபிடிப்பு சந்தைக்கு வந்து, 18 மாதம் ஆன பின், காப்புரிமை வழங்கப்படும். எங்கள் இயந்திரத்தின் முதற்கட்ட ஆய்வு முடிந்து விட்டது; விரைவில், காப்புரிமை கிடைக்கும். இவ்வாறு சதீஷ் சாமி வேலுமணி கூறினார்.- நமது சிறப்பு நிருபர் -

**மீன்பிடி துறைமுகத்தில் மேம்பாட்டு பணி**

காரைக்கால்: காரைக்கால் மீன்பிடி துறைமுகத்தில், பல்வேறு மேம்பாட்டுப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

காரைக்கால் மீன்பிடி துறைமுகத்தை, கடலோர பேரிடர் அபாய குறைப்பு திட்டத்தில், உலக வங்கி நிதியுதவியில் நவீனப்படுத்தும் வகையில், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், படகுகளை ஏற்றி இறக்க சாய்தளம், மின்சாரத்தினால் இயக்கும் அதிநவீன இழுவை அறை, படகு பழுது நீக்கும் தளம் உள்ளிட்ட பணிகளுக்கு அமைச்சர் சந்திரகாசு அடிக்கல் நாட்டினார்.

படகு பழுது நீக்கும் தளத்தில் ஒரே நேரத்தில் 35 டன் எடை அளவு கொண்ட 6 படகுகளை பழுது பார்க்கும் வசதி, சுத்திகரிப்பு நிலையம் நாள் ஒன்றுக்கு 10 லட்சம் லிட்டர் கழிவுகளை சுத்திகரிக்கும் திறன் கொண்டது.

இங்கு, ரூ.7.88 கோடி மதிப்பில் குளிரூட்டிய அறை, மீன் பதப்படுத்தும் நிலையம், ரூ.6.89 கோடி மதிப்பில் இரண்டு கீழ் நிலை தண்ணீர் தொட்டி அமைக்கும் பணிகள் நடக்கின்றன. எம்.எல்.ஏ.,க்கள் சிவா, திருமுருகன், கலெக்டர் வல்லவன், வாரியத் தலைவர்கள் கோவிந்தராஜ், உதயகுமார், திட்ட இணை இயக்குனர் (பொது) மாலதி கலிவரதன், திட்ட அமலாக்க

முகமை (தொழில் நுட்பம்)அதிகாரி சத்தியமூர்த்தி, மீன்வளத் துறை துணை இயக்குனர் இளையபெருமாள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மேட்டூர் அணையில் 12,000 கனஅடி நீர்திறப்பு

மேட்டூர் : மேட்டூர் அணை டெல்டா நீர்திறப்பு நேற்று மாலை, 6 மணி முதல் வினாடிக்கு, 12,000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது.

மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு வினாடிக்கு, 8,000 கனஅடி நீர்திறக்கப்பட்டது. டெல்டா மாவட்டங்களில் வடகிழக்கு பருவமழை தீவிரம் குறைந்ததால், பாசனத்துக்கான நீர்தேவை அதிகரித்தது. இதனால், நேற்று மாலை, 6 மணி முதல் மேட்டூர் அணை டெல்டா நீர்திறப்பு வினாடிக்கு, 12,000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. நேற்று அணை நீர்மட்டம், 68.670 அடியாகவும், நீர் இருப்பு, 31.570 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. வினாடிக்கு, 9,796 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது.

## மழை நீர் தேங்காமல் இருக்க விழிப்புணர்வு

நாமக்கல் : நாமக்கல் மாவட்டம் முழுவதும், டெங்கு காய்ச்சலை பரப்பும், ஏ.டி.எஸ்., கொசுக்கள் உற்பத்தியாகக்கூடிய பிளாஸ்டிக் கப்கள், தேங்காய் சிரட்டைகள், உடைந்த பானைகள், கண்ணாடி மற்றும் பிளாஸ்டிக் பாட்டில்கள், ஆட்டுக்கல் உரல் போன்றவற்றில் தேங்கியுள்ள தண்ணீரை அகற்றி, அபேட் மருந்துகள் தெளித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. தாதம்பட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில், மாணவர்கள் விளையாட டயர்கள் உள்ளது. அதில் மழை நீர் தேங்கியுள்ளது. இதையடுத்து எர்ணாபுரம் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் ராஜேந்திரன் தலைமையில் சுகாதார

மேற்பார்வையாளர் செல்வம், சுகாதார ஆய்வாளர்கள் முகம்மதுரபி, ராஜகணபதி, ராஜசேகர், இளங்கோவன் உள்ளிட்ட மருத்துவக் குழுவினர் டயர்களை துளையிட்டு, அதில் மழை நீர் தேங்கதாவாறு செய்யப்பட்டது. மேலும் பஞ்சர் கடைகள், பழைய டயர் கடைகள், போன்ற கடைகளில் ஆய்வு செய்து, அவைகளில் மழை நீர் தேங்காவண்ணம் துளையிட்டும், டயர்களில் மழை நீர் தேங்காதவாறு பாதுகாப்பான இடத்தில் வைக்கவும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

## பால் குளிரூட்டும் நிலையம் துவக்கம்

ஈரோடு : சத்தியமங்கலம் தாலுகா, மாக்கனாகோம்பை பஞ்சாயத்தில், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் மூலம், புதிதாக அமைக்கப்பட்ட சிறுபால் குளிரூட்டும் நிலைய கட்டிட திறப்பு விழா நடந்தது. அங்கு, 12 லட்சம் ரூபாயில் கட்டடப்பட்ட புதிய குளிரூட்டும் நிலையம், 16 லட்சம் ரூபாயில் அமைக்கப்பட்ட சிறு பால் குளிரூட்டும் கருவி செயல்பாட்டை, அமைச்சர் தோப்பு வெங்கடாசலம், துவங்கி வைத்து பேசினார்.

## கரூர் மாவட்ட விவசாயிகள் யுகலிப்டஸ் பயிரில் ஆர்வம்

கரூர் : கரூரில் இருந்து, நெரூர் செல்லும் வழியில், விவசாயம் செழிப்புடன் காணப்பட்ட நிலையில் தற்போது, யுகலிப்டஸ் மரங்களை விவசாயிகள் பயிரிடுகின்றனர். கரூர் அருகே, நெரூர் செல்லும் வழியில், ஆயிரக்கணக்கான ஏக்கரில் வாழை, கரும்பு, மா, கோரை பயிரிட்டுள்ளனர். தண்ணீர் அதிகம் தேவையில்லாத யுகலிப்டஸ் மரம் பயிரிடுவதில் தற்போது விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதுகுறித்து, பூந்தோட்ட காணிப்பாளையம் விவசாயி தர்மசாமி கூறியதாவது:கரூரிலிருந்து, நொய்யல் செல்லும் வழியில் யுகலிப்டஸ்

மரம் பயிரிட்டுள்ளோம். ஆறு மாதங்களுக்கு மேல், மரங்கள் நன்றாக வளர்ந்த பின், மரங்களை வெட்டி ஒரு டன், 5,000 ரூபாய், யுகலிப்டஸ் இலைகளை தனியாக பறித்து, தைலம் எண்ணெய் தயாரிக்க அனுப்பி வைக்கிறோம். அதிலும், தைல மர இலை காய்ந்த பின் மூட்டைக்கு ரூ.1,000 முதல் ரூ.2,000 வரை லாபம் கிடைக்கிறது.ஆனால், தைலமரம் பயிரிடும் சுற்றுப்பகுதியில் ஒரு விவசாயமும் செய்ய முடியாது. ஏனென்றால், காற்றின் ஈரப்பதத்தை இது முழுமையாக உறிஞ்சி விடும். மற்ற பயிர்களுக்கு தண்ணீர் இல்லாமல் வாடி வதங்கி விடும். யுகலிப்டஸ் மரம் பயிரிடும் தொகை செலவு குறைவு என்றாலும், மற்ற பயிர்கள் வாடி வதங்கும் போது எங்களுக்கே வருத்தமாக உள்ளது.இந்த மரம் நடுவதற்கும், பயிரிடுவதற்கும் கால நிர்ணயம் கிடையாது. எந்த சூழ்நிலையிலும் பயிரிடலாம். இதனால், நிலம் இருந்தும் வறுமையில் வாடும் விவசாயிகள் தற்போது யுகலிப்டஸ் மரம் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.இவ்வாறு, அவர் கூறினார்.

## விலை வீழ்ச்சியால் வீதிக்கு வந்த முட்டைக்கோஸ்

தாண்டிக்குடி:கொடைக்கானல் மேல்மலை கிராமங்களில் விளைந்த முட்டைக்கோஸ் விலையின்றி கீழ்மலை கிராமத்தில் வாகனங்களில் விற்கப்படுகிறது. வடகவுஞ்சி, பூண்டி, மன்னவனூர், கவுஞ்சி, போலூர், கிளாவரை, பூம்பாறை பகுதியில் பலநூறு ஏக்கர் பரப்பில் முட்டைக்கோஸ் உள்ளிட்ட காய்கறிகள் விளைவிக்கப்படுகிறது.

கடந்த சில வாரங்களாக பெய்த கனமழையால் முட்டைக்கோஸ் விளைச்சல் அதிகரித்தது. தொடர்ந்து காய்கறிகள் விலை சரிவை சந்தித்த நிலையில் உற்பத்தி செய்த செலவுக் கூட வழியின்றி முட்டைக்கோஸ் விலை வீழ்ச்சி கண்டது. வாடகை, பறிக்கும் செலவு என கூட்டி கழித்த

விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டது. மூன்று கிலோ எடையுள்ள முட்டைக்கோஸ் கீழ்மலை பகுதியில் சரக்கு வாகனங்களில் ரூ.10 முதல் ரூ.20 வரை விற்பனை செய்கின்றனர். எதிர்பார்த்த விலை கிடைக்காத மேல்மலை விவசாயிகளுக்கு இவ்விவசாயத்தில் ஏமாற்றமே மிச்சம் என நொந்து கொள்கின்றனர்.

## சீமை கருவேல மரங்களை அகற்றசிறப்பு நிதி ஒதுக்கீடு வேண்டும்:உள்ளாட்சி நிர்வாகிகள் கோரிக்கை

ஆத்தூர்;ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் சீமை கருவேல மரங்களை அகற்றுவதில் உள்ளாட்சி அமைப்புகள் அக்கறை காட்டவில்லை என புகார் எழுந்துள்ளது. சீமை கருவேல மரங்கள் நிலத்தடி நீர் ஆதாரம் மற்றும் சுற்றுச்சூழலை வெகுவாக பாதிப்பதால் அவற்றை முழுமையாக அகற்ற வேண்டும் என தமிழக அரசு உத்தரவிட்டது. உடனடியாக கிராம ஊராட்சிகள், பேரூராட்சிகள் தங்கள் எல்லைக்குட்பட்ட குறிப்பிட்ட பகுதிகளில் இயந்திரம் மூலம் சீமை கருவேல மரங்களை அகற்றும் பணியை துவக்கினர். அந்தந்த உள்ளாட்சி அமைப்பின் மக்கள் பிரதிநிதிகள், அதிகாரிகள் பணி நடப்பதை பார்வையிடுவது போல போட்டோ எடுத்தனர். இதனை உயரதிகாரிகளுக்கு அனுப்பியதுடன் அந்த பணியை நிறைவு செய்தனர். இவ்வாறாக கருவேல மரங்கள் அகற்றுதல் "ஒருநாள் கூத்தாக' அரங்கேறியது. தங்கள் பகுதியில் உள்ள சீமை கருவேல மரங்களை முழுமையாக அகற்ற வேண்டும் என்பதில் ஆர்வம், அக்கறை காட்டவில்லை. தற்போது திரும்பிய பக்கமெல்லாம் கருவேல மரங்கள் நீக்கமற நிறைந்துள்ளன. ஓரளவு கிடைக்கும் மழைநீர், நிலத்தடியில் சேகரிக்கப்படாமல் கருவேல மரங்கள் <உறிஞ்சி விடும் அபாயம் உள்ளதால் பொதுமக்கள் இதுகுறித்து கவலையடைந்துள்ளனர்.

உள்ளாட்சி அமைப்பில் பதவி வகிக்கும் மக்கள் பிரதிநிதி ஒருவர் கூறும்போது,"" ஊரக வேலை வாய்ப்பு திட்ட பயனாளிகள் சீமை

கருவேல மரங்களை வெட்டும் பணிக்கு வர மறுக்கின்றனர். இயந்திரம் மூலம் அகற்றுவதற்கு ரூபாய் பல ஆயிரங்கள் செலவாகும். பணியாளர்களுக்கு சம்பளம் வழங்க கூட நிதி ஆதாரம் இல்லாமல் திணறும் நிலை உள்ளதால் மரங்களை அகற்ற முடியவில்லை. சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்தால்தான் சீமை கருவேல மரங்களை முழுமையாக அகற்றுவது சாத்தியமாகும்," என்றார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**மேட்டூர் அணையின் நீர்வரத்து 5,763 கனஅடியாக குறைவு**

மேட்டூர் அணையின் நீர்வரத்து, 9,796 கனஅடியிலிருந்து 5,763கனஅடியாக குறைந்தது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் 68.15 அடியாகவும், நீர் இருப்பு 31.13 டி.எம்.சி.,யாகவும் உள்ளது. மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக வினாடிக்கு 12 ஆயிரம் கனஅடி நீரும், அணையிலிருந்து கிழக்கு மற்றும் மேற்கு கால்வாய் பாசனத்திற்காக 700 கனஅடி நீரும் திறக்கப்படுகிறது.

**பருப்பு வளர்க்கும் வெறுப்பு!**

வெங்காய விலை உயர்வைக் கட்டுப்படுத்த மத்திய அரசு வெங்காயம் இறக்குமதி செய்ததுபோல, இப்போது பருப்பு விலையைக் கட்டுப்படுத்த பருப்புகளை இறக்குமதி செய்யத் தொடங்கியுள்ளது. ஏற்கெனவே 5,000 டன் பருப்பு இறக்குமதி செய்யப்பட்டு, துறைமுகங்களுக்கு வந்துள்ள நிலையில், மேலும் 2,000 டன் பருப்பு முன்னெச்சரிக்கையாக இறக்குமதி

செய்யப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம், துவரம் பருப்பின் விலை கிலோ ரூ.85-ஆக இருந்தது. சில வாரங்களாக ரூ.130 முதல் 150 வரை விற்பனை செய்யப்பட்ட துவரம் பருப்பு, கடும் தட்டுப்பாடு காரணமாக தற்போது சந்தையில் ரூ.180 வரை விற்கப்படுகிறது. வேடிக்கை என்னவென்றால், இந்த விலை உயர்வின் பயனை அனுபவிப்பது இடைத்தரகர்களான பருப்பு வியாபாரிகளே தவிர, விவசாயிகள் அல்ல.

பருப்பு உற்பத்தியில் தட்டுப்பாடு ஏற்படும் என மத்திய வேளாண் துறை கடந்த மே மாதத்திலேயே தோராய மதிப்பீடு செய்து அறிவித்தது. மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம் ஆகிய இரு மாநிலங்களில்தான் இந்தியாவின் 60% பருப்பு சாகுபடி செய்யப்படுகிறது. பருவமழைப் பற்றாக்குறை, புயல் காரணமாக, பருப்பு சாகுபடி பாதிக்கும் என்றும், எதிர்பார்க்கப்பட்ட 180 லட்சம் டன் பருப்பு உற்பத்தி, குறைந்தபட்சம் 6% வீழ்ச்சி அடைவதால், 170 லட்சம் டன் பருப்பு உற்பத்திக்கே வாய்ப்பு உள்ளது என மத்திய வேளாண் துறை கணக்கிட்டு அறிவித்திருந்தது. இந்த அறிவிப்பு வந்தபோதே மத்திய அரசு சுதாரித்துக் கொண்டிருக்க வேண்டும்.

இந்தியாவில் சமையல் எண்ணெய், பருப்பு இவற்றுக்கான தேவை, உற்பத்தி இரண்டுக்கும் இடைவெளி இருக்கிறது. சமையல் எண்ணெய், பருப்பு இரண்டையும் நாம் ஆண்டுதோறும் இறக்குமதி செய்துதான் தேவையை நிறைவு செய்கிறோம். இதில் உள்நாட்டு விளைச்சல் பாதிக்கப்பட்டு, சந்தைக்கு வரத்துக் குறையும் என்றால் பற்றாக்குறையும் விலையேற்றமும் நடைபெறுவது இயல்பு. எப்போதெல்லாம், மத்திய வேளாண் துறை விளைச்சல் குறையும் என்று கணித்துச் சொல்கிறதோ, அப்போதெல்லாம் பருப்பு வியாபாரிகள் உடனடியாகப் பதுக்கல் வேலைகளைத் தொடங்கி விடுகிறார்கள். ஏற்கெனவே உள்ள பற்றாக்குறையுடன் இந்தப் பதுக்கலும் சேர்ந்தால், தட்டுப்பாடு

கடுமையாகி, விலையேற்றமும் அதிகரிக்கிறது. இது சாமானியனுக்குக்கூட தெரிந்த உண்மை. மத்திய வேளாண் துறை உற்பத்திக் குறைவு பற்றி கணித்தபோதே, மத்திய அரசு நடவடிக்கையில் இறங்கியிருந்தால், இந்நேரம் சந்தையில் பருப்புத் தட்டுப்பாடு இருந்திருக்காது. மத்திய அரசு பருப்பு வகைகளை சந்தையில் சரியான நேரத்தில் கொண்டுவந்து சேர்க்கும் என்று தெரிந்தால், லாபம் இல்லாத பதுக்கலில் வியாபாரிகளும் ஈடுபட மாட்டார்கள். உள்நாட்டில் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டு, வெளிநாடுகளில் பருப்பைத் தேடிப் போகும்போது அவர்களும் நமது இயலாமைப் புரிந்து கொண்டு விலையை ஏற்றிவிடுகிறார்கள். அதிக விலைக்கு வாங்கி வந்து, அதை இந்திய மக்களுக்கு குறைந்த விலையில் கொடுப்பதால் அரசுக்கு ஒருபுறம் நஷ்டம். இதுதவிர, விலைக் கட்டுப்பாட்டு நிதி என்று ரூ.500 கோடியை ஒதுக்கி, பருப்புகளின் இறக்குமதிக் கட்டணம், பருப்பு உடைப்பு மற்றும் சுத்திகரிப்பு கட்டணம், லாரி வாடகை அனைத்தையும் அரசே ஏற்றுக்கொண்டு, சந்தையில் குறைந்த விலையில் பருப்பை விற்பனை செய்யும் கட்டாய நிலைமையும் ஏற்படுகிறது. உணவுப் பொருள்கள் பற்றாக்குறை அல்லது சமையல் எண்ணெய்ப் பற்றாக்குறை என்பது பேரிடர் மேலாண்மை போன்றது அல்ல. வேளாண்மைத் துறை இவற்றின் உற்பத்தியைக் கணித்துச் சொல்லிவிடுகிறது. அப்போதே நாம் இறக்குமதியைச் செய்யத் தொடங்கினால், சந்தையில் விலையேற்றம் என்பது இயல்பாகவே கட்டுப்பாட்டில் இருக்கும். இது ஆட்சியாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும் தெரியாமல் போனது என்பதை நம்ப முடியவில்லை. பருப்பு அழுகும் பொருள் அல்ல. சரியான முறையில் பாதுகாக்கப்பட்டால் ஓராண்டுக்கும் மேலாக இருப்பில் வைக்கக்கூடிய பொருள். பருப்புத் தேவையைப் பொருத்தவரையில், ஒவ்வோர் ஆண்டும், இந்தியா 40 லட்சம் டன் பருப்பு வகைகளை இறக்குமதி செய்துதான் தனது தேவையை நிறைவு செய்கிறது.

"எப்போதும் கூடுதலாகவே இறக்குமதி செய்து, பருப்புக்கு தனி சேமிப்பு கிடங்கு உருவாக்கப்படும்' என்று இப்போது மத்திய அமைச்சர் அருண் ஜேட்லி கூறியிருக்கிறார். இந்த நிலையைப் புரிந்துகொள்ள நிதி அமைச்சருக்கும், வர்த்தக அமைச்சருக்கும் வேளாண் அமைச்சருக்கும் இவ்வளவு நாள் தேவைப்படுகிறது என்றால், அவர்களது திறமையின்மையைத்தான் அது வெளிச்சம்போடுகிறது. சேமிப்புக் கிடங்கில் போதுமான அளவு எப்போதும் இருப்பில் இருக்கவும், தேவைக்கு அதிகமாக பருப்பு, எண்ணெய் கையிருப்பில் மிகும்போது, அதை மட்டும் அவ்வப்போது பொதுச்சந்தை வியாபாரிகளுக்கு விற்பனை செய்யவுமான நடவடிக்கை, இவற்றின் விலையைக் கட்டுப்பாட்டில் வைக்க உதவும். பருப்பு விலை உயர்வு திறமையின்மையின் விளைவா? இல்லை ஆட்சியாளர்கள் தெரிந்தே செய்த தவறா? உணவுப் பொருள்கள் விலைவாசி ஏற்றம் தொடருமேயானால் அதனால், பாதிக்கப்படப் போவது அடுத்த ஆண்டு தேர்தலைச் சந்திக்க இருக்கும் மாநிலங்களில் உள்ள ஆளும் கட்சிகள்தான். ஐந்து ஆண்டுகள் என்னதான் நல்லாட்சி நடத்தினாலும் கட்டுக்கடங்காத விலைவாசி உயர்வு ஏற்படுமேயானால், அந்த ஆட்சிகள் மக்களால் அகற்றப்பட்டிருப்பதுதான் சரித்திரம் காட்டும் உண்மை. அதனால்தான், மத்திய அரசு மெத்தனமாக இருந்துவிட்டதோ?

**பயிர் காப்பீடு திட்டத்தை அமல்படுத்த கோரிக்கை**

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி ஒன்றித்தில் பயிர் காப்பீடுத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என திமுக கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இளையான்குடி மேற்கு ஒன்றிய திமுக செயற்குழுக் கூட்டம் அவைத் தலைவர் பெரியசாமி தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது. திமுக ஒன்றியச் செயலாளர் சுப.மதியரசன்

சிறப்புரையாற்றினார். கூட்டத்தில், நடிகை மனோரமா மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. ஒன்றியம் முழுவதும் கட்சி சார்பில் தெருமுனை பிரசாரக் கூட்டங்கள் நடத்துவது, இளையான்குடி ஒன்றியத்தில் நெல் விதைப்பு, மிளகாய் விதைப்பு பணி முற்றிலுமாக முடிந்துவிட்டதால் பயிர் காப்பீடுத் திட்டத்தை உடனடியாக அமல்படுத்த மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில், திமுக ஒன்றிய நிர்வாகிகள் அய்யாச்சாமி, சேகர், மலைமேகு, முருகேசன், இளைஞரணி பிரபு, மாவட்ட மாணவரணி சந்திரசேகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## அக்.30-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

விருதுநகரில் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் அக்.30-ம் தேதி நடைபெற உள்ளது. விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் ஆட்சியர் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும். கூட்டத்தில் விருதுநகர் மாவட்ட விவசாயிகள் கலந்து கொண்டு விவசாயம் தொடர்பான கோரிக்கைகளை மனுவாக நேரில் அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் அலுவலக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேட்டூர் அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு அதிகரிப்பு

காவிரி டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்படும் நீரின் அளவு, நொடிக்கு 12 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. காவிரி டெல்டா மாவட்டங்களில் பரவலாக மழை பெய்த காரணத்தால், மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவு நொடிக்கு 8 ஆயிரம்

கனஅடியாக குறைக்கப்பட்டிருந்தது. தற்போது காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில், மழை இல்லாததால் பாசனத்தேவை அதிகரித்துள்ளது.

இதனால், வியாழக்கிழமை மாலை 6 மணிமுதல் டெல்டா பாசனத்துக்காக திறக்கப்படும் நீரின் அளவு நொடிக்கு 12 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதேபோல், மேட்டூர் அணையின் கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்துக்கு நொடிக்கு 500 கனஅடி வீதம் திறக்கப்பட்டு வந்தது. கால்வாய் பாசனப் பகுதிகளில் மழை இல்லாத காரணத்தால் வியாழக்கிழமை காலை 10 மணிமுதல் கால்வாய் பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவு நொடிக்கு 700 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. வியாழக்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர் மட்டம் 68.67 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 9,796 கனஅடி வீதம் தண்ணீர் வந்துகொண்டிருந்தது. அணையின் நீர் இருப்பு 31.57 டி.எம்.சியாக உள்ளது.

**குளித்தலை பகுதியில் பலத்த மழை: 5,000 ஏக்கர் பயிர்கள் அழுகும் நிலை**

கரூர் மாவட்டம், குளித்தலை பகுதியில் கடந்த சில நாட்களாக பெய்த தொடர் மழையால் சுமார் 5,000 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள வாழை, கரும்பு, கோரை பயிர்கள் அழுகும் நிலை ஏற்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட வயல்வெளிகள் மற்றும் காட்டுவாரி, வாய்க்கால்களை இந்திய கம்யூ. கட்சியின் கரூர் மாவட்டச் செயலாளர் பெரியசாமி உள்ளிட்டோர் பார்வையிட்டனர். இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் அவர் மேலும் கூறியது: காட்டுவாரியில் செடிகள், ஆகாயத்தாமரை, நாணல் ஆகியவை படர்ந்து இருப்பதால் மழைக்காலங்களில் தண்ணீர் செல்ல வழியின்றி அருகில் உள்ள வயல்வெளிகளில் புகுந்து விடுகிறது. இதைத் தவிர்க்க மகாதானபுரம் அருகே உள்ள காட்டுவாரிக்கு வரும் நீரை லாலாபேட்டை வழியே காவிரி ஆற்றில் கலக்கும் படி செய்ய

வேண்டும். இதுபோல் திம்மாச்சிபுரம்,குமாரமங்கலம் வழியே செல்லும் காட்டுவாரிக்கு வரும் நீரை பேட்டைவாய்த்தலை அருகே உள்ள மணல்போக்கி வழியே காவிரி ஆற்றில் கலக்கும் படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், தற்போது பெய்துள்ள தொடர் மழைக்கு சுமார் 5,000 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள வாழை, கரும்பு உள்ளிட்ட பயிர்கள் தண்ணீரில் மூழ்கி அழுகும் நிலையில் உள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தமிழக அரசு நிவாரணத் தொகையை உடனே வழங்க வேண்டும். போர்க்கால அடிப்படையில் காட்டுவாரி வாய்க்கால்களை தூர் வார நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில் விவசாய தொழிலாளர்கள், பொதுமக்களை ஒன்று திரட்டி போராட்டம் நடத்துவோம் என்றார். ஆய்வின் போது மாவட்ட துணைச்செயலாளர்கள் சேசன், உடையவன்,மோகன், பொருளாளர் ராஜேந்திரன், விவசாய சங்க நிர்வாகி மகாலிங்கம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**தொடர் மழை: 40 அடியை எட்டிய பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம்**

தொடர் மழையின் காரணமாக முக்கிய அணையான பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை 40 அடியை எட்டியது.

வெள்ள அபாயம்:தொடர் மழையின் காரணமாக குமரி மாவட்டத்தின் பிரதான அணைகளின் நீர்மட்டம் உச்ச அளவை மீண்டும் நெருங்கி வருகின்றன. பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் வெள்ள அபாய அளவான 71 அடியைக் கடந்துள்ளது. சிற்றாறு அணைகளின் நீர்மட்டமும் வெள்ள அபாய அளவைக் கடந்து உச்ச அளவான 18 அடியை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. இந்நிலையில் பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நண்பகலில் 40 அடியைக் கடந்துள்ளது.

மழை தீவிரம்:மாவட்டத்தில் அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகள் மற்றும் மலையோரப் பகுதிகளில் மழை தொடர்ந்து பெய்து வருகிறது. வியாழக்கிழமை பேச்சிப்பாறை, சிற்றாறு, பெருஞ்சாணி மற்றும் நகரப் பகுதிகளான திருவட்டாறு, குலசேகரம், அருமனை உள்ளிட்ட பகுதிகளில் கனமழை பெய்தது. அணைகளில் நீர்மட்டம்:வியாழக்கிழமை காலை நிலவரப்படி பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 39.95 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1022 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 71.20 அடியாக இருந்தது. இந்த அணைக்கு விநாடிக்கு 342 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

சிற்றாறு 1 அணையின் நீர்மட்டம் 16.40 அடியாகவும். சிற்றாறு 2 அணையின் நீர்மட்டம் 16.50 அடியாகவும், பொய்கை அணையின் நீர்மட்டம் 11 அடியாகவும், மாம்பழத்துறையாறு அணையின் நீர்மட்டம் 54.12 அடியாகவும் இருந்தது.

**நெல் பயிருக்கு கூடுதல் யூரியா வேண்டாம்: வேளாண் துறை**

நெல் பயிருக்கு கூடுதல் யூரியா அளிக்க வேண்டாம் என வேளாண் துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வேளாண் இணை இயக்குநர் த.தனசேகரன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: மாவட்டத்தில் தற்பொழுது நல்ல மழை பெய்து சம்பா பருவ நடவுப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே விவசாயிகள் யூரியா போன்ற தழைச்சத்து அளிக்கக்கூடிய உரங்களை

பரிந்துரைக்கப்பட்ட அளவினை விட அதிக அளவில் பயன்படுத்தக் கூடாது. கூடுதல் அளவுக்கு யூரியா பயன்படுத்தினால், பயிர்களின் வளர்ச்சி அதிகரித்து பூச்சிநோய் தாக்குதலுக்கு உள்ளாக நேரிடும். இதனால் மகசூல் குறையும் வாய்ப்பு அதிகமாக உள்ளது.

எனவே விவசாயிகள் மண்வள பரிசோதனை அடிப்படையில் உரமிடுவது மிகவும் நல்லது. மேலும், யூரியாவுடன் மணி மற்றும் சாம்பல் சத்து தரக்கூடிய உரங்களைச் சேர்த்து பயன்படுத்த வேண்டும். விவசாயிகளிடையே குருணை வடிவான யூரியா உரத்தினை விட சிறிய அளவிலான யூரியா உரம் அதிக பயனைத் தரக்கூடியது என்ற தவறான எண்ணம் நிலவி வருகிறது. குருணை வடிவிலான யூரியா மற்றும் சிறிய அளவிலான யூரியா இரண்டிலும் தழைச்சத்து 46 சதவீதம் உள்ளது.

தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் தேவையான அளவு யூரியா, டிஏபி, பொட்டாஷ் மற்றும் காம்ப்ளக்ஸ் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு, விநியோகிக்கப்படுகிறது. எனவே விவசாயிகள் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில் உரங்களைப் பெற்று பயன்பெறலாம்.

தனியார் விற்பனை நிலையங்களில் உரங்களை வாங்கும்போது ரசீதினை விவசாயிகள் தவறாமல் கேட்டுப்பெறவும். மேலும், மூட்டைகளிலுள்ள விற்பனை விலையை சரிபார்த்து வாங்க வேண்டும் என்று அந்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**விளைச்சல்-வரத்து அதிகரிப்பால் கோயம்பேடு மார்க்கெட்டில் ஆப்பிள், சாத்துக்குடி விலை குறைந்தது**



சென்னை

விளைச்சல்-வரத்து அதிகரிப்பால் கோயம்பேடு மார்க்கெட்டில் ஆப்பிள், சாத்துக்குடி விலை குறைந்துள்ளது. ஆயுதபூஜை பண்டிகை காலத்தில் விலை அதிகரிக்கும் என வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். ஆப்பிள், சாத்துக்குடி விலை

கடந்த 1-ந்தேதி முதல் அகில இந்திய அளவில் லாரிகள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட போது, ஆப்பிள், சாத்துக்குடி, மாதுளை போன்ற பழங்களின் விலை சற்று உயர்ந்தது. லாரிகள் வேலைநிறுத்தம் வாபஸ் பெறப்பட்டதை தொடர்ந்து, தற்போது அந்த பழங்களின் விலைகள் குறைந்துள்ளது. இந்தநிலையில், வருகிற 21-ந்தேதி ஆயுதபூஜை பண்டிகை வர இருப்பதால், இன்னும் ஓரிரு நாட்களில்

ஆப்பிள், சாத்துக்குடி விலை அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாக பழக்கடை வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து சென்னை கோயம்பேடு மார்க்கெட் மொத்த பழ வியாபாரி பழக்கடை ஜெயராமன் கூறியதாவது:-

ஆயுதபூஜை

இந்த மாதம் தொடக்கத்தில் இருந்து பழங்களின் விலை சற்று உயர்ந்து காணப்பட்டது. அதன்பிறகு கொஞ்சம், கொஞ்சமாக அதன் விலைகள் குறைந்துள்ளது. ஆயுதபூஜை, விஜயதசமி பண்டிகை காலத்தில் விசேஷ பூஜைக்காக ஆப்பிள், சாத்துக்குடி பழங்களை வாங்குவார்கள். எனவே அந்த நேரத்தில் பொதுவாகவே ஆப்பிள், சாத்துக்குடி ஆகியவற்றின் விலை அதிகரிக்கும். தற்போது ஒரு கிலோ ஆப்பிள் ரூ.70 முதல் ரூ.120 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதேபோல், ஒரு கிலோ சாத்துக்குடி ரூ.35 முதல் ரூ.40 வரை விற்பனை செய்யப்படுகிறது. ஆயுதபூஜை, விஜயதசமி பண்டிகை நேரத்தில் இந்த 2 பழங்களின் விலையும் கிலோவுக்கு ரூ.10 முதல் ரூ.20 வரை அதிகரிக்கும். நாளொன்றுக்கு இமாச்சல பிரதேசம், சிம்லா ஆகிய பகுதிகளில் இருந்து ஆப்பிள் 20 லாரிகளில் தற்போது வந்து கொண்டு இருக்கிறது. இன்னும் ஓரிரு நாட்களில் தினமும் 40 முதல் 50 லாரிகளில் விற்பனைக்கு வரத்தொடங்கும்.

விலை நிலவரம்

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் நேற்று விற்பனை செய்யப்பட்ட பழங்களின் விலை நிலவரம் (ஒரு கிலோ) வருமாறு:-

ஆப்பிள் - ரூ.70 முதல் ரூ.120 வரை, மாதுளம் பழம் - ரூ.80 முதல் ரூ.120 வரை, சாத்துக்குடி - ரூ.35 முதல் ரூ.40 வரை, ஆரஞ்சு - ரூ.35 முதல் ரூ.40 வரை, திராட்சை - ரூ.50 முதல் ரூ.60 வரை, கொய்யாப்பழம் - ரூ.40, சப்போட்டா - ரூ.40, அன்னாசி பழம்(காய் ஒன்று) - ரூ.40, வாழைப்பழம் (தார் ஒன்று) - ரூ.200 முதல் ரூ.300 வரை.

இவ்வாறு அவர் கூறினார்.

**பொள்ளாச்சியில் சீல் வைக்காத இறைச்சிகளை விற்றால் கடும் நடவடிக்கை நகராட்சி அதிகாரிகள் எச்சரிக்கை**



பொள்ளாச்சி

பொள்ளாச்சியில் சீல் வைக்காத இறைச்சிகளை விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நகராட்சி அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். ஆடுவதைக்கூடம்

பொள்ளாச்சி காந்தி மார்க்கெட்டிற்கு பின்புறம் ரூ.25 லட்சத்து 50 ஆயிரம் செலவில் ஆடு வதைக்கூடம் கட்டப்பட்டது. தற்போது அந்த ஆடு வதைக்கூடம் ரூ.10½ லட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இங்கு ஆடுகளுக்கு மருத்துவ பரிசோதனை செய்யும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

மேலும் ஆடுகள் உடல் ஆரோக்கியமாக உள்ளதா? என்பது குறித்து கால்நடை டாக்டர் பரிசோதனை செய்து அதன் பிறகு வெட்டுவதற்கு அனுமதிக்கப்படுகிறது. நடவடிக்கை எடுக்கப்படும்

இதுகுறித்து நகராட்சி அதிகாரிகள் கூறியதாவது:- பொள்ளாச்சி நகராட்சி பகுதியில் சுகாதாரமான இறைச்சிகளை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. அதன்படி காந்தி மார்க்கெட்டிற்கு பின்புறம் ஆடுவதைக்கூடம் கட்டப்பட்டு உள்ளது.

இங்கு ஆடுகளை வெட்டுவதற்கு முந்தைய நாள் ஆடுகளை கொண்டு வர வேண்டும். அங்கு கால்நடை டாக்டர் ஆட்டினை பரிசோதனை செய்வார்.

அப்போது ஆடு நோய் வாய் பட்டிருப்பது கண்டறியப்பட்டால் ஆடு வெட்ட அனுமதிக்கப்படாது. தடை

இதே போன்று ஆட்டை வெட்டிய பிறகு அதன் குடல் மற்றும் வயிற்றில் புழுக்கள் இருந்தாலோ அல்லது ஆட்டிறைச்சியின் நிறம் மாறி இருந்தால் விற்பனை செய்ய தடை செய்யப்படும். எனவே இறந்த மற்றும் நோய் வாய்ப்பட்ட ஆடுகளை வெட்டுவதற்கு கொண்டு வர கூடாது. ஆடுவதைக்கூடத்தில் இருந்து அனுப்பப்படும் இறைச்சிகளுக்கு சீல் வைக்கப்படும். எனவே சீல் வைக்காத இறைச்சிகளை விற்பனை செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இது தொடர்பாக அதிகாரிகள் அவ்வப்போது இறைச்சி கடையில் சோதனை செய்வார்கள். ஆடு வெட்டிய பின்பு அதன் திரவ கழிவுகளை பயோகியாஸ் தயாரிப்பதற்கும், மரம், செடிகளுக்கு உரமாகவும் பயன்படுத்தப்படும். திடக்கழிவுகள் மண்புழு உரம் தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**மத்திய அரசு திட்டத்தின் கீழ் மானாவாரி விவசாயிகளுக்கு இலவச ஆடு, கறவை மாடுகள் அதிகாரி தகவல்**




திண்டுக்கல்

மத்திய அரசு திட்டத்தின் கீழ் 100 மானாவாரி விவசாயிகளுக்கு இலவச ஆடுகள் மற்றும் கறவை மாடுகள் வழங்கப்பட உள்ளதாக வேளாண் அதிகாரி தெரிவித்தார். மானாவாரி விவசாயம்

தமிழகத்தில் ஏராளமான மானாவாரி விவசாய நிலங்கள் உள்ளன. இந்த நிலங்களில் வடகிழக்கு பருவமழை காலங்களில் உளுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயறு போன்ற பயறுவகைகள் மற்றும் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்த மானாவாரி நிலங்களை மட்டும் நம்பி ஏராளமான விவசாயிகள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு ஆண்டுதோறும் வடகிழக்கு பருவமழை காலங்களில் 3 மாதம் மட்டுமே வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் கிடைக்கிறது. மீதமுள்ள 9 மாதங்கள் வேலை இல்லாததால் அவர்களுக்கு போதிய வருமானம் கிடைப்பதில்லை. இதனால் அவர்களது வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகிறது. இதனை தடுக்கவும், மானாவாரி விவசாயிகளுக்கு ஆண்டு முழுவதும் வருமானம் கிடைக்கும் வகையில்

மத்திய அரசு தேசிய நீடித்த, நிலையான வேளாண்மை திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது. இதுகுறித்து திண்டுக்கல் மாவட்ட வேளாண் துணை இயக்குனர்(மத்திய திட்டம்) தவமுனி கூறியதாவது:-

இலவச ஆடு, கறவை மாடுகள்

மத்திய அரசு அறிமுகப்படுத்தி உள்ள தேசிய நீடித்த, நிலையான வேளாண்மை திட்டத்தின் கீழ், திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் வட்டாரத்திற்கு உட்பட்ட இ.சித்தூர், அம்மாபட்டி, நாகையகோட்டை ஆகிய 3 கிராமங்களில் 100 மானாவாரி விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு உள்ளனர். இவர்களுக்கு சொந்தமான 100 ஹெக்டேர் மானாவாரி நிலங்களை தொகுத்து பயறு வகை செயல்விளக்க திடல் அமைக்கப்பட உள்ளது. இதற்காக 100 விவசாயிகளுக்கும் தலா ரூ.10 ஆயிரம் மதிப்புள்ள பயறு வகைகள் மற்றும் நிலக்கடலை சாகுபடி செய்வதற்கான இடுபொருட்கள் இலவசமாக வழங்கப்பட்டு உள்ளது.

மேலும் இந்த விவசாயிகளில் 50 பேருக்கு ரூ.13 ஆயிரத்து 500 மதிப்பில் தலா 10 ஆடுகளும்(9 பெட்டை, 1 கிடா), 50 பேருக்கு தலா ரூ.17 ஆயிரத்து 500 மதிப்பில் ஒரு கறவை மாடும் இலவசமாக வழங்கப்பட உள்ளது. ஆடு, கறவை மாடுகள் வழங்கப்பட உள்ள 100 விவசாயிகளுக்கும், திட்டம் தொடர்பான அறிமுக கூட்டம் நாகையகோட்டையில் நடத்தப்பட்டது.

இவ்வாறு அவர் கூறினார்.

**தொடர் மழை எதிரொலி: விசுவக்குடி நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் 12 அடியாக உயர்வு பொதுப்பணித்துறை அதிகாரி ஆய்வு**



வேப்பந்தட்டை பகுதியில் தொடர் மழை எதிரொலியால் விசுவக்குடி நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் 12 அடியாக உயர்ந்துள்ளது. இதனை பொதுப்பணித்துறை அதிகாரி ஆய்வு செய்தார்.

விசுவக்குடி நீர்த்தேக்கம்

பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டையை அடுத்துள்ள விசுவக்குடியில் கல்லாற்றின் குறுக்கே பொதுப்பணித்துறை சார்பாக செம்மலை, பச்சைமலை ஆகிய மலைகளை இணைத்து விசுவக்குடி நீர்த்தேக்கம் அமைக்கும் பணி நடந்து வருகிறது. இந்த பணி தற்போது 80 சதவீதம் முடிந்துள்ளது. இந்த நீர்த்தேக்கம் மூலம் கல்லாற்று நீர் வீணாகாமல் தடுத்து விவசாயம் மற்றும் குடிநீர் தேவைகளுக்கு பயன்படுத்தும் வகையில் முதல்கட்ட பணியாக ரூ.19 கோடியில் 665 மீட்டர் நீளமுள்ள கரையுடன் கூடிய கட்டுமானபணிகள் நடந்துள்ளது. இந்த அணைக்கட்டு மூலம் 30.67 மில்லியன் கன அடி தண்ணீரை 10 மீட்டர் ஆழத்திற்கு

சேமிக்க இயலும். இதற்காக நீர்போக்கியின் இருபுறமும்¢ மலையுடன் இணைக் கும் வகையில் 12 மீட்டர் உயரத்திற்கு கரைகள் அமைக்கப்பட்டு மண்அரிப்பு ஏற்படாதபடி கருங்கல் பதிக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

தொடர்மழை

இந்நிலையில் வேப்பந்தட்டை பகுதியில் கடந்த சில தினங்களாக பெய்த தொடர்மழையினால் கல்லாற்றில் வந்த நீர் விசுவக்குடி நீர்த்தேக்கத்தில் தேங்கியது. இதனால் தற்போது 34 அடி உயரம் கொண்ட நீர்த்தேக்கத்தில் 12 அடி உயரத்திற்கு நீர் தேங்கியுள்ளது. இந்நிலையில் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் தெய்வீகன் விசுவக்குடி நீர்தேக்கத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது வரும் காலங்களில் படிப்படியாக நீர்தேக்கி வைப்பதற்கான ஆலோசனைகளை அதிகாரிகளுக்கு வழங்கினார். இந்த ஆய்வின்போது உதவி செயற்¢பொறியாளர் வேல்முருகன், உதவிப்பொறியாளர் கார்த்திக், விவசாய சங்கதலைவர் ராமராஜன் மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**புதுக்கோட்டை மாவட்டத்தில் தொடர் மழை: சாகுபடி பணிகள் தீவிரம்**



புதுக்கோட்டை மாவட்டத்தில் தொடர்மழை காரணமாக சாகுபடி பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

தொடர்மழை

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள நார்த்தாமலை, மேலூர், அம்பாசத்திரம், விளத்துப்பட்டி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் கடந்த சில நாட்களாக தென்மேற்கு பருவமழை பெய்து வருவதால் விதைப்பு மற்றும் நாற்று விடும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இது குறித்து விவசாயிகள் கூறுகையில், நாற்று நடும் பணியை உரிய நேரத்தில் தொடங்க முடியவில்லை. தற்போது பெய்து வரும் மழை நீரை கொண்டு நிலத்தை உழுது நடவு பணியை தொடங்கியுள்ளோம். தொடர்ந்து மழை பெய்தால் மட்டுமே சாகுபடி செழிக்கும் என்றனர்.

தண்ணீர் பற்றாக்குறை

விவசாயிகள் சேற்றில் கை வைத்தால் தான் நாம் அனைவரும் சோற்றில் கை வைக்க முடியும். மேலும் தற்போது விவசாய நிலங்கள் அனைத்தும் வீட்டு மனைகளாக மாறி வருவதால் விவசாயம் தள்ளாடி வரும் சூழ்நிலையில் தண்ணீர் பிரச்சினை, வேலை ஆட்கள் பற்றாக்குறை விவசாயிகள் பற்றாக்குறையும் விவசாயத்தை பெரிதும் பாதிக்கின்றன. மேலும் மருந்து மற்றும் உரங்களின் விலை உயர்வும் விவசாயிகளுக்கு சவால் விட்டு கொண்டிருக்கின்றன. ஆங்காங்கே தற்சமயம் தண்ணீர் வசதி உள்ள இடங்களில் மட்டுமே வயல் வெளிகள் பசுமை பெற ஆரம்பித்துள்ளன.

**அமெரிக்காவில் விருது பெற்றுத்திரும்பிய மீனவப் பெண்ணுக்கு பாம்பன் மக்கள் வரவேற்பு**



கடல் வளங்களை பாதுகாத்தலுக்காக அமெரிக்காவில் விருது பெற்று பாம்பன் திரும்பிய மீனவப் பெண்ணை பொதுமக்கள் வரவேற்றனர்.

கடல்பாசி சேகரிப்பு ராமேசுவரம் அருகே உள்ள பாம்பன் சின்னப் பாலம் பகுதியில் வசித்து வருபவர் மீனவப் பெண் லட்சுமி. இவர் மன்னார் வளைகுடா பாசி சேகரிப்பு பெண்கள் கூட்டமைப்பில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட பெண்களை ஒரு குழுவாக வைத்து அதன் பொறுப்பாளராக உள்ளார்.

இவர், பாம்பன் முதல் மண்டபம் வரை தீவு அருகே உள்ள கடல் பகுதியில் பாசி சேகரிப்பு பணியில் ஈடுபட்டு வந்தார். பாசி சேகரிப்பில் மீனவப்

பெண்களை ஒரு கட்டுப்பாடுடனும், பாசிகள் முழுமையாக அழியாமல் இருப்பதற்காக குறிப்பிட்ட நாட்கள் மட்டுமே பாசி சேகரிப்பில் ஈடுபடுத்தி வந்தார். இந்தநிலையில் கடல் வளங்களை பாதுகாத்தலுக்கான விருதுக்கு அமெரிக்காவில் உள்ள சீக்காலஜி என்ற தொண்டு நிறுவனத்திடம் பாம்பன் லட்சுமி பெயரை பேடு தொண்டு நிறுவனமும், மீன் பிடி தொழிலாளர் யூனியன் கூட்டமைப்பும் பரிந்துரை செய்தன. அதன்பேரில் கடல்வளங்களை பாதுகாத்தலுக்கான விருது மற்றும் 10 ஆயிரம் அமெரிக்க டாலரை (இந்திய மதிப்பு ரூ.6 ½ லட்சம் ) மீனவப் பெண் லெட்சுமிக்கு அமெரிக்காவில் சீக்காலஜி தொண்டு நிறுவனம் வழங்கியது. இந்த விருதை அமெரிக்கா சென்று பெற்ற அவர், பாம்பன் திரும்பினார். அவரை மேளதாளம் முழங்க பாம்பன் சின்னப்பாலம் கிராமத்தை சேர்ந்த பொதுமக்கள், பேடு தொண்டு நிறுவன நிர்வாகிகள், மீன் பிடிதொழிலாளர் யூனியன் கூட்டமைப்பு நிர்வாகிகள், ஊராட்சி மன்றத் தலைவர் பேட்ரிக், பள்ளி மாணவ-மாணவிகள், ஜமாத் நிர்வாகிகள் வரவேற்று ஊர்வலமாக அழைத்துச்சென்றனர். மகிழ்ச்சி

இதுகுறித்து லட்சுமி கூறியதாவது:-

கடல் வளங்களை பாது காத்தலுக்கான விருதுக்கு எனது பெயரை பரிந்துரை செய்து விருது பெற பரிந்துரை செய்த மன்னார் வளைகுடா பாசிசேகரிப்பு மீனவப் பெண்கள் கூட்டமைப்பிற்கும், தொண்டு நிறுவனம் மற்றும் மீன் பிடி தொழிலாளர் யூனியனுக்கும், விருதை வழங்கி கவுரவித்த அமெரிக்காவில் உள்ள சீக்காலஜி தொண்டு நிறுவனத்திற்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அமெரிக்காசென்று இந்த விருது வாங்கி வந்தது மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது. விருதுடன் கிடைத்த பரிசுத் தொகையை பாம்பன் சின்னப்பாலத்தில் உள்ள அரசு பள்ளியின் கட்டமைப்பிற்கும், சின்னப்பாலம் கிராமத்தின் அடிப்படை

கட்டமைப்பிற்கும் பயன்படுத்துவேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

**டெல்டா பாசனத்துக்கு மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு அதிகரிப்பு**



மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்காக கடந்த ஆகஸ்டு மாதம் முதல் தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. இவ்வாறு திறந்து விடப்படும் தண்ணீர் பாசனத்தின் தேவைக்கேற்ப அதிகரித்தோ, குறைத்தோ வெளியேற்றப்படுகிறது. இந்த நிலையில் பாசன பகுதிகளில் கடந்த வாரம் மழை பெய்து வந்ததால், அங்கு தண்ணீர் தேவை குறைந்தது. இதனால் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு வினாடிக்கு 12 ஆயிரம் கனஅடி வீதம் திறந்து விடப்பட்ட தண்ணீர் கடந்த 12–ந் தேதி முதல் வினாடிக்கு 8 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டது.

இதற்கிடையே, டெல்டா பாசன பகுதியில் கடந்த 3 நாட்களாக மழை பெய்வது நின்றது. இதனால் பாசனத்துக்கான தண்ணீர் தேவை மீண்டும் அதிகரித்தது. இதன் காரணமாக நேற்று மாலை முதல் டெல்டா

பாசனத்துக்கு திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 12 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டு உள்ளது. அப்போது அணைக்கு வினாடிக்கு 9 ஆயிரத்து 796 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

நீர்வரத்து குறைந்த உள்ள நிலையில் பாசனத்துக்கு திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு மீண்டும் அதிகரிக்கப்பட்டு உள்ளதால் அணையின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருகிறது. நேற்றைய நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 68.67 அடியாக இருந்தது.

**விவசாயிகளுக்கு நேரடி மானியம் வழங்கி பருத்தி பஞ்சு விலையை சந்தை தீர்மானிக்க அனுமதிக்க வேண்டும் மத்திய அரசுக்கு சைமா கோரிக்கை**



கோவை

விவசாயிகளுக்கு நேரடி மானியம் வழங்கி பருத்தி பஞ்சு விலையை சந்தை தீர்மானிக்க அனுமதிக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு சைமா

சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. தென்னிந்திய பஞ்சாலைகள் சங்க (சைமா) தலைவர் செந்தில் குமார் விடுத்துள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

சந்தை நிர்ணயம்

சீனாவின் பருத்தி கொள்கையால் உலகளவில் பருத்தி ஏற்றுமதி கடுமையாக பாதிப்படைந்துள்ளது. இந்த கொள்கை, இந்தியாவை அதிகளவில் பாதித்துள்ளது. ஆகவே இந்திய பருத்தி கழகத்தின் வாரியத்தை சீரமைத்து அதில் 80 சதவீத பருத்தியை உபயோகிக்கும் ஜவுளி தொழில் துறையினருக்கு பிரதிநிதித்துவம் அளித்திட வேண்டும். பருத்தி சீசன் காலத்தில் இந்திய பருத்தி கழகம், தெலுங்கானா, ஆந்திர பிரதேசம், மற்றும் மராட்டியத்தின் சில பகுதிகளில் இருந்து நல்ல தரமான பஞ்சை கொள்முதல் செய்தது. ஆனால் அவற்றை 2 மாதங்களுக்கு மேலாக இருப்பு வைத்து கொண்டதால் ஜவுளி ஆலைகள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகின.

ஆகவே இந்திய பருத்தி கழகம், பருத்திக்கு குறிப்பிட்ட விலையை விட அதிகமாக விலை நிர்ணயம் செய்வதை தவிர்க்க வேண்டும். அதன் மூலம் ஊக வணிகத்துக்கு இடமளிக்க கூடாது. மேலும் இ-ஏலம் மூலம் செய்யப்படும் வியாபாரத்தை சந்தை நிர்ணயம் செய்ய அனுமதிக்க வேண்டும். ஆய்வு செய்ய வேண்டும்

இந்திய பருத்தி கழகம் இ-ஏலம் மூலம் பருத்தி விதைகளை விற்க வேண்டும். அதற்கு நியாயமான பருத்தி விதை வணிக கொள்கையை பின்பற்ற வேண்டும். இந்திய பருத்தி கழகம் பருத்தி பஞ்சை சிறு அளவுகளில் விற்க வேண்டும். அதன் மூலம் இடைத்தரகர் பஞ்சு

வியாபாரிகளின் ஆதிக்கத்தை தடுக்க வேண்டும். இந்திய பருத்தி கழகம் ஒளிவு மறைவற்ற பருத்தி வர்த்தக கொள்கையை பின்பற்ற வேண்டும்.

அதனை கண்காணிக்க ஜவுளித்துறை சம்பந்தப்பட்ட அனைவரும் இடம் பெறும் ஒரு கமிட்டியை ஜவுளி ஆணையர் தலைமையில் அமைக்கப்பட வேண்டும். அவற்றை ஜவுளித்துறை அமைச்சர் குறிப்பிட்ட காலங்களில் ஆய்வு செய்ய வேண்டும். பருத்தி ஆலோசனை கமிட்டியையும், பருத்தி ஆலோசனை வாரியத்தையும் முன்பு இருந்தது போல் ஒன்றாக்க வேண்டும். தற்போது பஞ்சு உற்பத்தி மதிப்பீடு செய்வதில் ஒரு வெளிப்படை தன்மையில்லை. நேரடி மானியம் ஆகையால் ஏற்கனவே இருந்தது போன்று அனைவரையும் உள்ளடக்கிய ஒரு கமிட்டியை மீண்டும் உருவாக்கி மதிப்பீடு, பருத்தி கையிருப்பு ஆகியவற்றை நிர்ணயிக்க வேண்டும். குறைந்த பட்ச பருத்தி நிர்ணய அடிப்படையில் பஞ்சு வாங்கும் போது அதற்கான பலனை நேரடியாக விவசாயிகளுக்கு மானியத்தை வழங்க வேண்டும். உலக ஜவுளி தொழிலின் முதன்மை நாடாக விளங்கும் சீனா குறைந்த பட்ச நிர்ணய அடிப்படையில் பஞ்சு வாங்கியதால் மிகவும் பாதிக்கப்பட்டது. ஆகையால் சீனா மானியத்தை நேரடியாக விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. அதே போன்று நம் நாட்டிலும், மானியத்தை நேரடியாக விவசாயிகளுக்கு வழங்கி பஞ்சு விலையை சந்தை தீர்மானிக்க அனுமதிக்க வேண்டும். இதன் மூலம் அரசாங்கத்தின் செலவு குறைவதோடு பஞ்சு விலையில் ஒரு நிலைத்த தன்மை ஏற்பட்டு பன்னாட்டு சந்தை விலைக்கு பஞ்சு கிடைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன்

## முட்டை விலை உயர்வு

நாமக்கல்: நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நடைபெற்றது. இதில் ஒரு முட்டை விலை 5 காசுகள் உயர்த்தப்பட்டு 307 காசாக நிர்ணயிக்கப்பட்டது. தமிழ்நாடு, கேரளாவில் முட்டை விற்பனை அதிகரித்துள்ளதால் விலை உயர்த்தப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர். கடந்த சில நாட்களாக ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 302 காசாக இருந்தது. ஒரு கிலோ முட்டைக்கோழி விலை ரூ.58, ஒரு கிலோ கறிக்கோழி விலை ரூ.53ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## வரலாறு காணாத வகையில் விலை உயர்வு துவரம் பருப்பு கிலோ ரூ.210க்கு விற்பனை



சென்னை : வரலாறு காணாத வகையில் துவரம் பருப்பு விலை உயர்ந்துள்ளது. கிலோ ரூ.210க்கு விற்பனை செய்யப்படுகிறது. தமிழகத்துக்கு குஜராத், மத்தியபிரதேசம், உத்தரபிரதேசம், மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரா போன்ற வெளிமாநிலங்களில் இருந்து துவரம் பருப்பு விற்பனைக்கு வருகிறது. இந்த மாநிலங்களில் எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், வரத்து குறைந்துள்ளது. தேவை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக, கடந்த சில மாதங்களாக பருப்பு விலை உயர்ந்து வருகிறது. சில தினங்களுக்கு முன்பு 100 கிலோ கொண்ட துவரம் பருப்பு மூட்டை ரூ.17,000க்கும், ஒரு கிலோ ரூ.180க்கும், பாக்கெட் துவரம் பருப்பு ரூ.190க்கும் விற்கப்பட்டது. இந்நிலையில், நேற்று முன்தினம் துவரம் பருப்பு விலை மேலும் ராக்கெட் வேகத்தில் அதிகரித்தது. அதாவது, கிலோவுக்கு ரூ.15 வரை உயர்ந்தது.

இதனால், 100 கிலோ கொண்ட துவரம் பருப்பு மூட்டை ரூ.18,500 ஆகவும், ஒரு கிலோ ரூ.195, பாக்கெட் துவரம் பருப்பு ரூ.210 ஆகவும் அதிரடியாக விலை உயர்ந்துள்ளது. தான்சானியா நாட்டில் இருந்து இறக்குமதியாகும் துவரம் பருப்பு 100 கிலோ மூட்டை ரூ.13,000லிருந்து ரூ.15,000, ஒரு கிலோ ரூ.140லிருந்து ரூ.160 ஆகவும் விலை உயர்ந்துள்ளது. இந்த பருப்பு பெரிய சைசில் இருக்கும். ஆனால் ருசி இருக்காது. இதே போல, பாக்கெட் துவரம் பருப்பு ரூ.150லிருந்து ரூ.170 ஆகவும், கடலைப்பருப்பு ரூ.70லிருந்து ரூ.80, கடலைப்பருப்பு (2ம் ரகம்) ரூ.60லிருந்து ரூ.70 ஆகவும் விலை உயர்ந்துள்ளன. உளுத்தம் பருப்பு ரூ.170, உளுத்தம் பருப்பு பாக்கெட் ரூ.180, பர்மா உளுத்தம் பருப்பு ரூ.160, பர்மா உளுத்தம் பருப்பு பாக்கெட் ரூ.170 ஆகவும் விற்பனை செய்யப்படுகிறது. இதேபோல, சர்க்கரை ரூ.30லிருந்து ரூ.32 ஆகவும்

விலை உயர்ந்துள்ளது.

இதுகுறித்து, தமிழ்நாடு அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன் கூறியதாவது: விளைச்சல் குறைவு, ஆன் லைன் வர்த்தகம் போன்றவற்றால் பருப்பு விலை நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது. விலை உயர்வை கட்டுப்படுத்த வெளிநாடுகளில் இருந்து 5000 டன் பருப்பை மத்திய அரசு இறக்குமதி செய்தது. இந்நிலையில், மேலும் விலை உயர்ந்துள்ளதால் கூடுதலாக 2,000 டன் பருப்பு இறக்குமதி செய்யப்படும் என்று மத்திய நிதி அமைச்சர் அருண் ஜெட்லி அறிவித்துள்ளார். இது பாராட்டக்கூடிய விஷயமாக இருந்தாலும், சூட்டோடு சூட்டாக ஆன்லைன் வர்த்தகத்துக்கும் தடை விதிக்க வேண்டும். அப்போது, தான் பருப்பு விலை உயர்வை கட்டுப்படுத்த முடியும். ஆயுத பூஜை, தீபாவளி போன்ற விசேஷ நாட்கள் வருகின்றன. இதனால், பருப்பு விலை கிலோ ரூ.250 ஆக விலை உயர வாய்ப்புள்ளது. கடந்த 6 மாதங்களில் மட்டும் துவரம் பருப்பு கிலோவுக்கு ரூ.80 வரை உயர்ந்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார். பருப்பு விலை வரலாறு காணாத வகையில் அதிகரித்து வருவது நடுத்தர மற்றும் ஏழை எளிய மக்களை கடுமையாக பாதித்துள்ளது. இதனால், சிலர் வீடுகளில் சாம்பார் பயன்படுத்துவதை அடியோடு தவிர்த்து வருகின்றனர்.

ரேஷன் கடைகளில் கூட்டம்

கனடா நாட்டில் இருந்து இறக்குமதியாகும் ரெண்டியல் ரக துவரம் பருப்பு ரேஷன் கடைகளில் கிலோ ரூ.30க்கு கிடைக்கிறது. இதே போல, உளுத்தம் பருப்பும் ரூ.30க்கு கிடைக்கிறது. இதனால், ஒவ்வொரு ரேஷன் கடையிலும் காலையிலேயே சுமார் 100 பேர் கியூவில் நிற்கின்றனர். ஓட்டல்களில் உணவு பொருள் விலை உயர்கிறது பருப்பு மற்றும் காய்கறி விலை உயர்வை தொடர்ந்து சிறிய மற்றும் பிளாட்பார ஓட்டல்களில் தோசை, இட்லி, வடை உள்ளிட்டவற்றின் விலையை கணிசமாக

உயர்த்தியுள்ளனர். நடுத்தர ஓட்டல்களிலும் 5 சதவீதம் வரை உணவு பொருட்களின் விலையை உயர்த்த உரிமையாளர்கள் ஆலோசனை நடத்தி வருகின்றனர். அடுத்த மாதம் தொடக்கத்தில் இருந்து விலை உயர்வை அமல்படுத்தவும் திட்டமிட்டுள்ளனர்.

100க்கு 80 ஏக்கரில் சாகுபடி இல்லை என்பதை பதிவு செய்ய வேண்டும்

தா.பேட்டை, : முசிறி கோட்டாட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு, கோட்டாட்சியர் சுமன் தலைமை வகித்தார்.தாசில்தார் வாசுதேவன் முன்னிலை வகித்தார். முகாமில் கலந்து கொண்ட விவசாயிகள் மயில்கள், காட்டுப்பன்றிகள், குரங்குகள், காட்டுமாடுகள் உள்ளிட்ட வனவிலங்குகளால் பயிர்கள் பெரிதும் சேதமடைகிறது.

எனவே வனவிலங்குகளை கட்டுப்படுத்தி விவசாயிகளுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். தேசிய, தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் அய்யாக்கண்ணு பேசும் போது, கூட்டுறவு சங்கங்களில் விவசாய கடன் கிடைக்க உதவிடவும், விதவை சான்று, முதியோர் விதவை உதவித்தொகை ஆகியவை உடன் கிடைக்க ஆவண செய்ய வேண்டும். விவசாயிகள் கூட்டுறவு சங்கத்தில் வைத்துள்ள அடகு நகைகளை ஏலம் விடாமல் இருக்க உத்தரவிட வேண்டும். விவசாய விளைபொருட்களை சேதப்படுத்தும் குரங்குகளைப் பிடித்து குடும்பக் கட்டுப்பாடு செய்ய வேண்டும், சாகுபடி செய்துள்ள விவசாய நிலங்களை கண்டறிந்து சாகுபடி கணக்கு, பாதிப்பு கணக்கு எடுக்க உத்தரவிட வேண்டும். நூற்றுக்கு 80 ஏக்கரில் சாகுபடி இல்லை என்பதை பதிவு செய்ய வேண்டும் என்றார். கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் விவசாயம் தொடர்பான பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

**களக்காடு பகுதியில் பலத்த மழை**

களக்காடு, : களக்காட்டில் மழை பெய்து வருவதால் வெப்பம் தணிந்து குளிர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.களக்காடு பகுதியில் கடந்த சில நாட்களாக கோடை காலத்தை மிஞ்சும் வகையில் வெயில் கொளுத்தியது. இதனால் கடும் வெப்பம் நிலவியது. இரவிலும் அனல் காற்று வீசியது. தொடர் வெயிலால் ஆறு, குளம், கால்வாய்கள் தண்ணீரின்றி வறண்டன. இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களாக களக்காடு பகுதியில் வெயில் மறைந்து மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் பகலில் வெயில் சுட்டெரித்தது. மதியம் மழை கொட்டியது. நேற்று காலையிலும் மிதமான மழை பெய்தது. பின்னர் லேசாக வெயிலடித்த நிலையில் மதியத்திற்கு பிறகு மீண்டும் மழை கொட்டியது.

2 மணி நேரத்திற்கு மேலாக நீடித்த மழையால் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் குளம் போல் தேங்கியது. தெருக்களில் மழைநீர் ஆறு போல பெருக்கெடுத்து ஓடியது. களக்காடு திருக்கல்யாணத் தெருவில் கருத்த விநாயகர் கோயிலை மழைநீர் சூழ்ந்தது. மழையால் வெப்பம் தணிந்து குளிர்ச்சி ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதே போல் களக்காடு புலிகள் காப்பக மேற்கு தொடர்ச்சி மலையிலும் மழை பெய்துவருகிறது.

தி இந்து
தமிழால் இணைவோம்

**பருப்பு விலை உயர்வால் கர்நாடகத்தில் ஒரு வடை ரூ.25_: விவசாயிகளுக்கு பலனில்லை; இடைத்தரகர்கள் மீது குற்றச்சாட்டு**



கர்நாடகத்தில் பருப்பு விலை உயர்வால் உணவுப் பண்டங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. ஒரு வடை அதிகபட்சமாக ரூ.25 வரை விற்பனை செய்யப்படுகிறது.

கர்நாடகாவில் பருவ மழை பொய்த்ததால் துவரை, அவரை, உளுந்து உள்ளிட்ட அத்தியாவசிய தானியங்களின் விளைச்சல் கடுமையாக பாதித்தது. இதனால் பருப்பு வகைகள் ஏற்றுமதி வெகுவாக குறைந்து, அண்டை மாநிலங்களில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. பருப்பு வகைகளின் தட்டுபாடு காரணமாக துவரம் பருப்பு, உளுந்து, கடலை பருப்பு ஆகியவற்றின் விலை கடந்த 3 மாதங்களில் பல மடங்கு உயர்ந்து விட்டது.

இதனால் பெங்களூரு, மைசூரு, மங்களூரு உள்ளிட்ட இடங்களில் உள்ள உணவு விடுதிகளில் இட்லி, தோசை, வடை ஆகியவற்றின் விலை

கணிசமாக உயர்ந்துள்ளது. கடந்த 3 மாதங்களுக்கு முன்பு 2 இட்லி 20 ரூபாய்க்கு விற்கப்பட்டது. தற்போது ரூ.10 உயர்த்தி ரூ.30-க்கு விற்கப்படுகிறது. இதே போல ரூ. 8 முதல் ரூ.10-க்கு விற்கப்பட்ட உளுந்து வடையின் விலை தற்போது ரூ.15 முதல் ரூ.25 வரை உயர்த்தப்பட்டுள்ளது. முன்பு ரூ. 30 முதல் ரூ.40-க்கு விற்கப்பட்ட தோசையின் விலை தற்போது ரூ.50-க்கு விற்கப்படுகிறது.இதனால் வாடிக்கையாளர்கள் கடும் அவதிக்கு ஆளாகியுள்ளனர்.

இந்நிலையில் கர்நாடக விவசாய உற்பத்தி வர்த்தக குழு வெளியிட்டுள்ள அறிக்கையில், "கடந்த செப்டம்பர் மாதத்தில் நடுத்தர ரக துவரம் பருப்பு 1 குவின்டால் ரூ. 8,000-க்கு விற்கப்பட்டது. தற்போது அதே பருப்பு 12 ஆயிரம் ரூபாயாக உயர்ந்துள்ளது.

ரூ. 12 ஆயிரத்துக்கு விற்கப் பட்ட உயர் ரக துவரம் பருப்பு தற்போது குவின்டால் ஒன்றுக்கு 18 ஆயிரம் ரூபாயாக உயர்ந்துள்ளது. ஆனால் கடந்த ஆண்டு அக்டோபர், மார்ச்சில் இதே பருப்பு வகைகள் ரூ. 4,500 முதல் ரூ.6,000 வரை மட்டுமே விற்கப்பட்டன. அண்டை மாநிலங் களில் இறக்குமதி செய்தால் மட்டுமே அத்தியாவசிய பருப்பு களின் விலை குறையும்"என்றார்.

இது தொடர்பாக கர்நாடக மாநில விவசாயிகள் சங்கத் தலைவர் மாதே கவுடா கூறும்போது, "பருவமழை பற்றாக்குறையின் காரணமாக துவரை, உளுந்து, அவரை உள்ளிட்ட அத்தியாவசிய தானியங்களின் உற்பத்தி 40 சதவீதம் வரை குறைந்துள்ளது. மேலும் பருப்பு வர்த்தகர்களும், இடைத்தரகர்களும் தங்களது கிடங்குகளில் பருப்பை பதுக்கி வைத்துக்கொண்டு விலையை உயர்த்தியுள்ளனர். எனவே உணவு மற்றும் பொது விநியோக துறை அதிகாரிகள் கிடங்குகளை சோதனையிட வேண்டும்.

கர்நாடக அரசு விவசாயிகளிடம் இருந்து நேரடியாக விளைபொருட் களை கொள்முதல் செய்து, பொது விநியோக துறை மூலமாக விற்பனை

செய்யாதவரை வர்த்தகர்களும், இடைத் தரகர்களும் மட்டுமே கொழிப்பார்கள்" என்றார்.___

**தமிழகம் முழுவதும் 12 இடங்களில் சிறிய படகுத் தளம்: கடலோர பாதுகாப்பு குழுமம் தகவல்**

கல்பாக்கம் அணுமின் நிலையத் துக்கு கடல்வழி அச்சுறுத்தல் உள்ளதால், அதிநவீன படகுகள் மூலம் ரோந்து பணிகளை மேற் கொள்ள கோவளம், எண்ணூர் பகுதிகளில் சிறிய படகுதளங்கள் அமைக்கப்படுகிறது. இதேபோல், தமிழகம் முழுவதும் 12 இடங் களில் சிறிய படகு தளம் அமைக் கப்படுவதாக கடலோர பதுகாப்பு குழுமம் தெரிவித்துள்ளது.
காஞ்சிபுரம் மாவட்டத்தின் கடலோரப் பகுதியில் கல்பாக்கம் அணுமின் நிலையம் மற்றும் மாமல்லபுரம் சுற்றுலாத்தலம் அமைந்துள்ளது. கல்பாக்கம் அணுமின் நிலையத்துக்கு கடல் மார்க்கமாக தீவிரவாத அச்சுறுத் தல் இருப்பதால் கடலில் கண் காணிப்புப் பணிகளை தீவிரப் படுத்த கல்பாக்கம் கடல் பகுதியில் ரோந்து படகுத் தளம் அமைக்க முடிவு செய்யப்பட்டது. இதற்கான இடத்தைத் தேர்வுசெய்ய, கட லோரப் பாதுகாப்புப் படையின் தொழில்நுட்ப வல்லுநர் குழு கல்பாக்கம் பனையூர் மற்றும் அதை சுற்றியுள்ள கடல் பகுதி களைப் பார்வையிட்டு படகுதளம் அமைப்பதற்கான ஆய்வுகளை மேற்கொண்டது.

ஆனால், கல்பாக்கம் மற்றும் அதை சுற்றியுள்ள கடல் பகுதிகள் பாறைகள் நிறைந்து காணப் படுவதால், படகுகளை நிறுத்து வதற்கான ஆழம் மற்றும் படகுத் தளம் அமைப்பதற்கான கட்ட மைப்பு வசதிகளை கடலில் ஏற் படுத்த முடியாத சூழ்நிலை உள்ள தாக தொழில்நுட்ப குழுவினர் தெரிவித்ததால், படகுத் தளம் அமைவதில் சிக்கல் ஏற்பட்டது. இதனால், கடல் பகுதியில் படகு மூலம் ரோந்து பணி களை மேற்கொள்ள முடியாமல் கடலோர பாதுகாப்பு குழுமத் தினர் சிரமப்பட்டு வருகின்ற னர். இந்நிலையில், கடலோர மாவட்டங்களில் கடல் ரோந்து பணிகளை தீவிரப்படுத்துவதற் காக, அதிநவீன சிறிய படகுகளை

கடற்கரையையொட்டி நிறுத்தி பயன்படுத்தும் வகையில், தமிழ கம் முழுவதும் 12 இடங்களில் சிறிய படகுத் தளம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரு கிறது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், கோவளத்தை அடுத்த முட்டுகாடு பகுதியிலும் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் எண்ணூர் பகுதி யில் இந்த சிறிய படகுத் தளம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து, கடலோர பாது காப்பு குழும காஞ்சிபுரம் மாவட்ட மண்டல கண்காணிப்பாளர் மனோ கரன் ’தி இந்து’விடம் கூறியதாவது:

கல்பாக்கம் அணுமின் நிலைய பாதுகாப்புக்காகவும், கடல் வழி அச்சுறுத்தல்களை தடுப்பதற்காக வும் கடலோர பாதுகாப்பு குழுமத் தினர், கடலில் ரோந்து பணிகளை மேற்கொள்வது அவசியமாகிறது. ஆனால், கல்பாக்கம் பகுதியில் படகு தளம் இல்லாததால், சென்னையில் இருந்து படகுகளை இயக்கிவந்து கண்காணிப்பு பணிகளில் ஈடுபட வேண்டியுள் ளது. அதனால், பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகிறது.

ஆனால், படகு தளம் அமைக்க கூடிய அடிப்படை சூழல் இப்பகுதி கடலில் இல்லை. அதனால், அதிநவீன சிறிய படகு மூலம் ரோந்து பணிகளை மேற்கொள்ள முடிவு செய்யப் பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் 12 இடங்களில் தலா ரூ. 50 லட்சம் மதிப்பில் சிறிய படகுத் தளம் அமைக்கப்பட உள்ளன என்றார்.

**தமிழகம் முழுவதும்_ கருவேல மரங்களை அகற்றுவது தொடர்பாக தலைமைச் செயலர் இன்று ஆலோசனை_**

மிழகம் முழுவதும் கருவேல மரங்களை முற்றிலும் அகற்றுவது தொடர்பாக தலைமைச் செயலர் தலைமையில் சென்னையில் இன்று ஆலோசனை நடைபெறு கிறது என உயர் நீதிமன்றத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டது.

தமிழகம் முழுவதும் கருவேல மரங்களை அகற்றக் கோரி மதிமுக பொதுச் செயலர் வைகோ தாக் கல் செய்துள்ள பொதுநலன் மனு உயர் நீதிமன்ற மதுரை கிளையில் நீதிபதிகள் ஆர்.சுதாகர், வி.எம்.வேலுமணி ஆகி யோர் கொண்ட அமர்வு முன் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது வைகோ வாதிடும் போது, கருவேல மரங்களை முழுமையாக அகற்ற கடுமை யான உத்தரவை நீதிமன்றம் பிறப்பிக்க வேண்டும் என்றார்.

கூடுதல் அட்வகேட் ஜெனரல் கே.செல்லப்பாண்டியன் வாதிடும் போது, கருவேல மரங்களை அழிப் பது தொடர்பாக தலைமைச் செயலர் தலைமையில் சென்னை யில் இன்று ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

இந்த கூட்டத்துக்கு கருவேல மரங்களை அகற்றுவதில் ஈடுபாடு கொண்டவர்கள் அழைக்கப்பட் டுள்ளனர். இந்த கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என்றார்.

இதையடுத்து, “கருவேல மரங்களை அழிப்பது தொடர்பான ஆலோசனைகளை வைகோ எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்டும்.

தலைமைச் செயலர் தலைமையில் இன்று நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் எடுக் கப்படும் முடிவை அரசு தரப்பில் நீதிமன்றத்தில் தெரிவிக்க வேண் டும். பின்னர் நீதிமன்றம் உரிய உத்தரவு பிறப்பிக்கும்” என நீதி பதிகள் தெரிவித்தார்.

முன்னதாக திண்டுக்கல், நெல்லை மாவட்ட ஆட்சியர்கள் சார்பில் பதில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. பின்னர் விசாரணை அக். 28-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.___

**உலக உணவு தினம்**

“தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்” என்றார் பாரதி. அப்படி அழிக்கப்பட வேண்டிய நாள் மிக அருகில் வந்து விட்டது என்று தான் சொல்ல வேண்டும்.இன்றும் ஒருவேளை உணவுக்கு வகையின்றி வறுமையில் வாடும் ஏழைகள் அதிகம்.உயிர் வாழ உணவு அவசியம். அனைவருக்கும் உணவு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டியது அரசின் கடமை. இது மனித உரிமையும் கூட. பசியால் யாரும் வாடக்கூடாது, அனைவருக்கும் உணவு கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அக்.,16ம் தேதி, உலக உணவு தினம் கடைபிடிக்கப்படுகிறது.

தொடக்கம்:

1945 அக்டோபர் 16 ஆம் நாளன்று ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. இந்த நாளை நினைவு கூறும் வகையில் நாம் உயிர் வாழ அத்தியாவசியமான உணவைச் சிறப்பிக்கும் பொருட்டு நவம்பர் 1979 ஆம் ஆண்டில் 20வது பொது மாநாட்டில் ஐநா இந்நாளைச் சிறப்பு நாளாக அறிவித்து, உலக உணவு நாள் (World Food Day) ஆண்டு தோறும் உலக நாடுகள் அனைத்தாலும் கொண்டாடப்படுகிறது. ஹங்கேரியின் முன்னாள் வெளிநாட்டமைச்சர் பால் ரொமானி என்பவரின் முயற்சியினால் இத்தீர்மானம் ஏற்கப்பட்டு தற்போது 192ற்கும் அதிகமான நாடுகளில் இந்நாள் கொண்டாடப்படுகிறது.




இந்தியாவில் உணவு நிலை:

முக்கியமாக இந்தியா உணவுப் பாதுகாப்பில் பின் தங்கிய நிலையில் உள்ளது. சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட ஆய்வின்படி, உலக அளவில் பட்டினியால் பாதிக்கப்பட்டோர் தரப்பட்டியலில் இந்தியா அச்சுறுத்தலான நிலையில் இருப்பதாக தெரிவித்துள்ளது.

ஊட்டச்சத்து குறைபாட்டால் மகாராஷ்டிர மாநிலத்தின் 3 மாவட்டங்களில் கடந்த 11 மாதங்களில் ஊட்டச்சத்துக் குறைபாடுகள் காரணமாக 1,274 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர். நந்தர்பர் மாவட்டத்தில் 662, பால்காரில் 418, தானேயில் 194 குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடுகள் காரணமாக உயிரிழந்துள்ளனர். தானே மாவட்டத்தின் பிவாண்டி பகுதியில் சராசரி எடைக்கும் கீழ் உள்ள குழ்ந்தைகளின் எண்ணிக்கை 2013-ம் ஆண்டு 286-ஆக இருந்த்து. 2014-ல் இது 497-ஆக அதிகரித்தது. பழங்குடியினர் பகுதிகளிலும்

குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாடு விவகாரம் அதிகரித்து கொண்டே வருவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தியாவில் ஊட்டச்சத்து குறைபாட்டால் 19 கோடி பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐநாவின் உணவு மற்றும் வேளாண் நிறுவனம் தகவல் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அந்நிறுவனம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில், உலக நாடுகளில் மற்ற எந்த நாட்டை காட்டிலும் இந்தியாவில் அதிகப்படியாக 19 கோடி மக்கள் ஊட்டச்சத்து குறைப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலக அளவில் கடந்த 1990 ஆண்டுகளில் 79 கோடியாக இருந்த ஊட்டச்சத்து குறைபாடு அளவு தற்போது, 21 கோடியாக குறைந்துள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இந்தியாவில் இதன் அளவு ஒன்றரை கோடி மட்டுமே குறைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் 15 சதவீத மக்கள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஐநா கூறியுள்ளது. உலக அளவில் பசியோடு இருக்கும் மக்களின் எண்ணிக்கையானது 2014-15 ஆண்டில் 795 மில்லியனாக குறைந்து உள்ளது. கடந்த 1990-92-ம் ஆண்டுகளில் பட்டினியாக இருக்கும் மக்களின் எண்ணிக்கையானது ஒரு பில்லியன் ஆகும். உலகில் உணவுப் பாதுகாப்பின்மை நிலைகுறித்து ('தி ஸ்டேட் ஆப் புட் இன்செக்குரிட்டி இன் தி வேல்ட் 2015' ) ஐ.நா.வின் உணவு மற்றும் விவசாய அமைப்பு அறிக்கை சமர்பித்து உள்ளது. இந்தியாவில் பட்டினி குறைந்து உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டு உள்ளது. 1990-92ம் ஆண்டுகளில் பசியோடு இருந்த மக்களின் எண்ணிக்கை 210.1 மில்லியனாக இருந்தது. தற்போது 2014-15ல் 194.6 மில்லியனாக குறைந்து உள்ளது.

சர்வதேச விருது:

உலகளவில் அதிக உணவு உற்பத்திக்கு காரணமானவர்களை பாராட்டும் விதத்திலும், ஊக்குவிக்கும் விதத்திலும் சர்வதேச உணவு விருது, 1986 முதல் வழங்கப்படுகிறது. அமைதிக்கான நோபல் பரிசு வென்ற, நார்மன் போர்லாக் என்ற அமெரிக்கரின் முயற்சியால் இவ்விருது உருவாக்கப்பட்டது. இவ்விருது பெறுபவருக்கு 13 கோடி ரூபாய் வழங்கப்படுகிறது. இந்தியாவின் சார்பில் இதுவரை எம்.எஸ்.சுவாமிநாதன், வர்கீஸ் குரியன் உள்ளிட்ட ஆறு பேர் இவ்விருதை பெற்றுள்ளனர்.

அதிகபட்ச விவசாயி தற்கொலையை எதிர் கொண்டு வரும் நாம் இன்றும் நமக்கு கிடைத்த உணவை வீண் அடிக்கிறோம். அன்று முதல் இன்று வரை நமது நாட்டு மக்கள் விவசாயிகளும் அவர்கள் படும் கஷ்டத்தையும் எண்ணி பார்ப்பதில்லை. இனியாவது நமது நாட்டின் முதுகெலும்பாக இருக்கக்கூடிய விவசாயிகளை மதித்து அவர்களால் கிடைக்கக்கூடிய உணவை வீணாக்காமல் அவர்களுக்கு நன்றி செலுத்துவோம்.